

சந்நிதிப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தலில்
இவ் இலவச வெளியீட்டிதழ் உதயமாகியது.

தொண்டைமானாறு

ஸ்ரீ செல்வசந்நிதி வேலவனின்

# அற்புதங்களும்
# அனுக்கிரகங்களும்

2010


# பொருளடக்கம்

சந்நிதிக்கென்றொரு தனித்துவம் - ஸ்ரீவாணி..................... 04
எங்கள் பண்பாட்டின் தெய்வம் .................................. i
- பேராசிரியர் நா. சண்முகலிங்கன், துணைவேந்தர்
உண்மையா? பொய்யா? - K.S. கண்ணன், நல்லூர்............. iii
ஆலயத்தில் செய்யும் தவறுகள் .................................iv
தொண்டருக்குத் தொண்டனான சந்நிதியான் ......................05
சந்நிதிச் செல்வனிடம் முத்திப்பேறு...............................07
சந்நிதிச் செல்வனின் அன்புக்கட்டளை ..........................09
கேட்டவரம் தந்த சந்நிதி வேலன் ..................................11
- சி. தனபாலசிங்கம், புலோலி வடமேற்கு
சந்நிதியான் திரு முன்பாகச் சென்றால் .........................12
- தாரணன்
வேலை வணங்குவோர்க்கு வேதனை இல்லை ......................16
- வல்வை ந. அனந்தராஜ்
தணயனின் அன்பும், தந்தையின் அற்புதமும்.......................19
- P.S. ஜனார்த்தனன், பூநகரி
இந்து சமயம் தானாகவே வளர்கின்றது ..............................21
- லண்டனிலிருந்து நடேசபிள்ளை சுதாகரன்

## அன்பளிப்பு 10 /-

சென்றவருடம் நூல் இலவசமாக விநியோகிக்கப்பட்ட வேளை, அடியார்களின் அலைமோதல், நெருக்கடி அதிகரித்து தற்காலிக பிரதேச செயலகத்திற்குள் நுழைந்து சகல அலுவலர்களின் மேசை களையும் தரையில் சாய்த்துவிட்டார்கள். பணிகள் சிறிதுநேரம் இடைநிறுத்தப்பட்டன. பின்பு சப்பறத்தில் தொண்டர்கள் ஏறிநின்று நூல் விநியோகம் இடம்பெற்றன. கீழே போடப் போட ஏந்திக் கொண்டார்கள். இந்நெரிசலைப் பயன்படுத்தி சங்கிலித் திருட்டும் நடைபெற்றது. பல அன்பர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகளையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஒழுங்குநிலை பேணுவதற்காகவும், பல பெரியவர்களின் ஆலோசனைப்படியும், 25/-(முடிவுவிலையாகவுள்ள இந்நூலினை அன் பளிப்புப்பணம் 10 ரூபாவாக விநியோகிப்பதற்குத் தீர்மாணிக்கப்பட் டுள்ளது. இதனால் கிடைக்கப்பெறும் பணத்தினை பிரதேச செயலர வர்கள் பாதுகாத்து, அடுத்த வெளியீட்டிற்குப் பயன்படுத்தப்பெறும்.



க. உலககுருநாத ஐயர்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய

2010ம் ஆண்டு மகோற்சவ உரிமையாளர்

## பிரதமகுரு ச.கந்தசாமிஐயர் உலககுருநாதஐயர் அவர்களின்

## ஆசியுரை

யாழ்ப்பாண மாவட்டத்திலே வடமராட்சிப் பிரதேசத்தில் சிறப்புநாமம் உடைய தொண்டைமானாறு என்னும் ஊரினிலே செல்வச்சந்நிதி முருகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். முருகப்பெருமான் மருதர் கதிர்காமிடம் நேரில் தோன்றி தனக்கு மௌனபூசை ஆற்றவேண்டுமென கேட்டுக் கொண்டதற்கிணங்க, மருதர் கதிர்காமரும் அவர் வழித்தோன்றிய ஐயர் மாரும் அறுபத்துநான்கு ஆலமிலைகளில் அமுது படைத்துப் பூசைசெய்து வருகின்றனர்.

ஆரம்ப தோற்றமாக மிகச்சிறு கொட்டிலாக தோற்றம்பெற்ற ஆலயம், பெருமான் தன் பிரத்தியட்ச மகிமை அருளாட்சியால் பல சித்தர்களையும், எண்ணுக்கணக்கற்ற அடியார்களையும் தன்னகத்தே ஈர்த்தெடுக்கப்பட்டு இன்று மிகப் பிரமாண்டமான வளர்ச்சியைப்பெற்று விளங்குகின்றது. "சந்நிதி" என்ற சொல் பொதுவாக இறைவன் இருக்கும் கோயிலைக் குறிப்பதற்குப் பயன்பட்டாலும், இங்கு சந்நிதியே கோயிலாக உருவாக்கப்பட்டுள்ளமை சந்நிதிமுருகன் ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திறன்மிகு சந்நிதிஐயனின் தேர்த்திருவிழாவன்று சந்நிதியான் பால் ஈர்க்கப்பட்ட அன்பர் திரு. சி.சிவகுமார் அவர்களால் இவ்வருடமும் இரண்டாவது தடவையாக பெருந்தொகையான நூல்களை அடியவர்களுக்கு இலவசமாக வழங்கும் நற்செயலானது பெருமானின் அருள் ஊற்றெனத் திடமாக நம்புகிறேன். இப்பணியானது இலங்கை மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் சந்நிதிப்பெருமானின் மகிமையை எடுத்துச்செல்வதுடன், எமது சமயவளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பாக இருக்கின்றது. இப்பணி மென்மேலும் விரிவடைய கந்தப்பெருமான் அருள் வழங்குவாரென வாழ்த்தி, எனது நல்லாசிகளையும் வழங்குகிறேன்.

- **கந்தசாமிஐயர் உலககுருநாதஐயர்**

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

செல்வச்சந்நிதி வேலவனின் “அற்புதங்களும் அனுக்கிரகங்களும்” என்ற நூலினை திரு. சி. சிவகுமார் அவர்கள் 2009ம் ஆண்டில் இலவசமாக கந்தன் அடியவர்களுக்கு வழங்கியதோடு, தொடர்ந்தும் சந்நிதி வேலவனின் அருளினால் இவ்வாண்டும் தேர்த்திருவிழா அன்று வெளியிட்டு இலவசமாக வழங்கப்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலின் வெளியீட்டாளரான திரு. சி. சிவகுமார் அவர்கள் பல வருடங்களாக வல்வை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாவிலும் பல நூல்களை வெளியிட்டு இலவசமாக வழங்கி வந்துள்ளார்.

இந்நூல் எமது பிரதேசத்தில் மட்டுமல்ல உலகமெங்கும் பரந்து வாழும் கந்தன் அடியவர்கள், சமய ஆர்வலர்கள், மற்றும் பெருமானின் அற்புதங்களை அறியாதவர்களும் அறிந்துகொள்ளும் ஓர் அற்புதமிக்க வெளியீடாகும். இந்நூலின் வெளியீட்டாளர் முருகப்பெருமானின் ஆசிகளுடன் மேலும் பல நூல்களை வெளியிட்டு எம் சமூகத்திற்கு ஆன்மீக நல் வழிகாட்டல்களை வழங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**இ. வரதீஸ்வரன்**
பிரதேச செயலர்
பருத்தித்துறை.

அறுகம்புல் வழிபாடா? அத்வைத மேன் நிலையா?
அருவமா? உருவமா? அருவுருவக் கொள்கைகளா?
துறவா? இல்லறமா? தூயநற் பெருவாழ்வா?
அறமா? அன்பா? அழியாத பேரின்பமா?
அன்னதானம் வழங்கலா? அன்புருகத் தொண்டுபுரிதலா?
எது உனக்குத் தேவை? இருக்கிறதே இந்துமதம்!
ஆண்டாண்டு காலமாய் அழியாமல் வந்தமதம்!
ஆனால் எம்மக்களின் அவலநிலை காணீரோ?
பேணாமல் போய்விட்டால் பின்னர் இவை நிலைத்திடுமோ?
இருந்த இடத்தில் என்றும் தேர் இருக்கும்?
எம்பெருமான் கருவறைக்குள் சிலந்தி வலை இருக்கும்!
வறண்ட மனிதம் வளர்ந்து பெருகாவிடில்
வடம் இருக்கும்! வடம் பிடிக்க மனம் இருக்குமோ?

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය වඩමරාච්චි දකුණ හා බටහිර, කරවෙඩ්ඩ.
பிரதேச செயலகம், வடமராட்சி தெற்கு-மேற்கு, கரவெட்டி
Divisional Secretariat Vadamaradchy South -West, Karaveddy



## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

வடமராட்சிப் பிரதேசத்தின் தொண்டைமானாறு பகுதியில் அமைந்திருக்கும் சரித்திரப் பிரசித்திவாய்ந்த செல்வச் சந்நிதி ஆலயத்தின் இவ்வாண்டுக்கான மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எமது நாட்டின் தென்பகுதியில் கதிர்காமத்திருப்பதியிலே அமர்ந்திருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவனவெல்லாம் வழங்கி முருகன் அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றான். வடபகுதியிலே சந்நிதி வேலனாக அன்னதானக்கந்தனாக நாடிவருவோர்க்கு ஆறுதலை அளித்து அபயமளித்து வருகின்றான். சந்நிதியானின் பாதக்கமலத்தைப் பணிந்தவர்கள் எல்லாக் குறைகளும் நீங்கி சகல செல்வங்களையும் பெற்று சௌபாக்கியங்களுடன் வாழ்வதை நாம் காணமுடிகிறது.

அற்புதங்கள் பல செய்து மக்களை ஆட்கொண்டு அருள்பாலிப்பவன் கந்தப்பெருமான். ஆணவத்தை அழித்து தர்மவழியிலே பேரின்பப் பெருவாழ்வு வாழ முடியுமென்பதை சூரசங்காரத்தின் மூலம் நிரூபித்துத் தன்னை நம்பியிருக்கும் பக்தர்களுக்கு நிழலாக இருந்து அபயமளிப்பவனும் அவனே. உலக மக்கள் அனைவரும் சாந்தி, சமாதானம், அமைதி பெற்றுப் பெருவாழ்வு வாழ அருள்பாலிக்க வேண்டுமென எல்லாம்வல்ல செல்வச் சந்நிதியான் பாதங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

***சி. சத்தியசீலன்***
பிரதேச செயலர்,
கரவெட்டி.

**முருகன்**

*முருகு என்றால் அழகு என்பார்கள். இந்த சொல்லுக்கு இளமை, அழகு, மணம், கடவுள், தன்மை, தேன் என்று பல பொருள்களும் இருக்கிறது. ஆதலால் முருகன் மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாத நறுமணமும் நிறைந்த தெய்வத்தன்மையும் தெவிட்டாத இனிமையும் உடையவன் என்று பொருள் கொள்ளப்படுகிறது.*
*மெல்லின, இடையின, வல்லின மெய் எழுத்துக்களுடன் உ என்னும் உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு என்றாயிற்று. இம்மூன்றும் இச்சாசக்தி, கிரியசக்தி, ஞானசக்தி இவைகளைக் குறிக்கும் என்றும் சொல்கிறார்கள்*

உ

# சந்நிதிக்கென்றொரு தனித்துவம்

தலையா, கடலலையா என அல்லும் பகலும்
மக்கள்கூட்டம் அலைமோதுவது தேர், தீர்த்தத்தின் தனித்துவம்,
மலை மலையாய் அன்னம் குவிவதும்,
மடங்கள் பல குளிர்சோலையென சூழ்ந்திருப்பதும்,
நிரை நிரையாய் நின்று அன்பர்கள் அன்னம் உவப்பதும்
நீண்ட வரலாறு – சந்நிதிக்கே தனிச் சிறப்பு !
வரிசை வரிசையாய் பற்பலரக காவடிகள் வருவதும்
வாரிசு வாரிசாய் வாய்கட்டிப் பூசையாற்றுவதும்,
நுரை நுரையாய் ஆழிநீர் எடுத்துவந்து
நூதனமாய் வைகறைப் பொங்கலின் முன்பே விளக்கேற்றுவதும்,
கொட்டும் பறைமுழங்கப் பூசை நடப்பதும்
கோவணப் பண்டாரக் கந்தனவன் மகிழ்ந்தருள் புரிவதும்,
அற்புத ஆற்றினிலே அடியார் நிறைந்து நீராடுவதும்,
ஆலிலையில் பருப்புக் கறியுடன் அமுது படைத்து நிவேதிப்பதும்,
கதிர்காமத்தையன் திருவிழாவிற்கு வேல்விடுவதும்,
நிறைவில் மீண்டு வேல் வருவதும், – வந்த களைப்பாற நடுநிசியில்
பயத்தம் துவையலும் இளநீருமுண்டு பெருமான் பசியாறுவதும்,
ஆற்றொணாத் துயரமதில் அன்பர்கள்
நேர்த்திகள் நேருவதும், பூவரசமரத்தில் நேர்த்திகள் கட்டுவதும்
மாற்றமுடியா நோய்பிணிகள் மாற்றம் பெறுவதும்,
மாணிடம் மாண்புற்று மகிழ்வில் மிதப்பதும்,
நன்றிப் பெருக்காக வெள்ளியினாலும், தங்கத்தினாலும்
வேதனை தீர்த்த பெருமானுக்கு வேல் வழங்குவதும்,
தேறமுடியாத் துஷ்டசூரர்கள் வருடாவருடம் சங்காரமாவதும்,
அவதியுறுவோரும், ஆதரவற்றோரும், ஞானிகளும்
புண்ணியனார் சமாதிப் பூவரசமரத்தடியில் அடைக்கலம் புகுதலும்,
அவன் நிழலில் வாழ்தலும், அமுதுண்பதும், ஆற்றல் பெறுவதும்,
பாடுவதும், ஆனந்தக் கூத்தாடுவதும், மோட்சமடைவதும்
மந்திரமின்றிப் பூசை நடப்பதும்,
மந்திரத்தால் வெல்ல முடியாதவனுமாகிய
சந்நிதியானின் தனித்துவமே!

ஸ்ரீவாணி

# எங்கள் பண்பாட்டின் தெய்வம்



**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

செல்வச் சந்நிதியான் திருவிழாக் காலம் என்றால் எங்கள் தெருவீதியெல்லாம் ஆட்டக்காவடிகளின் அருள்லயம். அம்மம்மா வீட்டுத் திண்ணையில் இருந்தபடி அந்தத் தாளலயத்தில் வளர்ந்தது எங்கள் ஆத்மலயம்.

காவடி, பஜனை, எங்கள் கட்டுவனூரிலிருந்து சந்நிதியானிடம் பாதயாத்திரை; சின்னக்கிளியண்ணை நேர்த்திக்காக அம்மம்மா, ஐயயா, அப்பா, அம்மா, சீனியம்மா, சின்னம்மா, பிள்ளைகள், நாங்கள் எல்லோரும் சந்நிதி மடத்தில் வருடமொருநாள் கூடிய பொழுதுகளில், எங்களுக்குள் நிறைந்தது சமூகலயம்.

பின்னைநாளில் எங்கள் ஊரைத் தொலைத்து... சந்நிதியானும் தன் அழகுத் தேரைத் தொலைத்து... மனதுக்குள்ளேயே அவன் அழகை, அருளை, ஆட்டக்காவடி லயத்தினைக் காத்திருந்தோம்.

சென்ற ஆண்டின் திருவிழாவேளை எங்கள் தவமான அம்பிகையை சந்நிதியானிடம் அழைத்துச் சென்ற நாளில், வீதியுலாவில் முருகனை தோளில் தாங்கும் பேறு எனக்காகும்.

இந்த ஆண்டின் திருவிழா வேளை, அமரரான எங்கள் அன்பின் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்களின் துணைவியார் திருமதி இராஜேஸ்வரி துரைராஜா அவர்கள் வாயிலாக சந்நிதியான் அற்புதங்களை மெய்சிலிர்க்க கேட்கும் பாக்கியமும், அவற்றினை நூல் வடிவில் சமூகத்துக்காக்கிய சிவகுமார் ஐயாவின் அறிமுகமும் வாய்க்கும்.

அவரின் அன்பான வேண்டுதலில் சந்நிதி முருகன் பண்பாட்டுத் தனித்துவத்துக்கான இந்த முகவுரையை எழுதும் வாய்ப்பு வசமாகும்.

எங்கள் தேசப்பரப்பெல்லாம் முருகனின் அருளாலயங்கள்; பண்பாட்டின் தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் சான்றான முருக வழிபாட்டின் தனித்துவங்கள்.

வடக்கே செல்வச் சந்நிதி, தெற்கின் எல்லையிலே கதிர்காமம். கிழக்கு முழுமையும் தாந்தாமலை, மண்டூர், உகந்தையென விரிந்த தொன்மை மரபுகளின் வியாபகம்.

இத்தனை காலத்து சமஸ்கிருதமயமாக்க, நவீனமயமாக்க அலைகளைத் தாண்டிய ஆதி வழிபாட்டு மரபுகளின் தரிசனம்.

தொல்காப்பியம் குறிப்பிட்ட கந்தழி வழிபாட்டின் தொடர்ச்சியென புனிதப்பேழை. அதனுள் மானுடவியலாளர் இனங்காட்டும் குலக்குறியமான வேல் அல்லது வேலைத் தாங்கிய யந்திரம் வழிபடு பொருளாகவுள்ளது.

மந்திரமில்லாத மனமொழி வழிபாடு.

அருணகிரிநாதர் பாடும் "வனமுறை வேடர் அருளிய பூசை" வள்ளியம்மன் வழித்தோன்றல்கள் என கப்புறாளை - கப்புகனார் பெறும் மதிப்பும், ஆரத்திப்பெண்களென வேட்டுவ சிறுமிகளுக்கு தரப்படும் இடமும் தொடர்கின்றன.

தமிழ்மரபின் பெயரோடு விளங்குகின்ற வள்ளியம்மனுக்கு மட்டுமே சந்நிதி உள்ளமையும் கதிர்காமம், மண்டூர், செல்வச் சந்நிதி ஆலயங்கள் யாவற்றிலும் திருவிழாக்கால வீதியுலா வேளை முருகன் வள்ளியம்மன் சந்நிதியிலேயே தங்கி செல்வதான நடைமுறைகளும் ஆதித்தமிழ் முருகவழிபாட்டின் தடங்களாய் இன்றுவரை காக்கப் படுகின்றன.

எங்களின் தொன்மையை, பண்பாட்டு மேன்மையை உணர்த்தும் சந்நிதி முருகன் பெருந்திருவிழாப் பொழுதிலே அனைவரும் இணைந்திடுவோம்.

எங்கள் பண்பாட்டு எல்லைகளை எங்கள் வாழ்வியலோடு இணைந்த கரையாத்திரையை மீளவும் தொடங்கிடுவோம்.

மீண்டும் எங்கள் சந்நிதி முருகன் ஆட்டக்காவடி எங்கள் வீதிகள் தோறும் வலம்வரும் நாளுக்கான வரத்தினை வேண்டி நிற்போம்.

எங்கள் பண்பாட்டின் தெய்வம் சந்நிதியானைச் சரணடைந்தால் சகல நன்மைகளும் வசமாகும்.

☆☆☆

## உண்மையா? பொய்யா?

## என்ற சந்தேகத்தை நிவர்த்திசெய்த

## ஆற்றங்கரை முருகன்!

கதிர்காமத் திருவிழாவிற்கு "வேல்" போவதும், திருவிழா முடிய "வேல்" வருவதும் என்ற சம்பவத்தை என்னால் நம்பமுடியாமல் இருந்தது. 1974ம் ஆண்டு. அவ்வேளை எனக்கு பதினைந்து வயதிருக்கும். எதையுமே நம்பாது ஆராய்ச்சி செய்து பார்க்கும் சுபாவம் அப்போது என்னிடத்தில் இருந்தது. 1974ல் எனது சந்தேகத்தைத் தீர்க்க, வேல் கதிர்காமத்திற்கு அனுப்பும்வேளை சந்நிதிக்குச் சென்றேன். பூசை முடிந்து குருக்கள் கையில் வேலுடன், பக்தர்களின் அரோகரா கோசத்துடன் பூங்கொல்லையை நோக்கி விரைந்து செல்லும்போது, நானும் இவர்களுடன் சேர்ந்து ஓடினேன்.

பூங்கொல்லையை அடைந்தவுடன் பார்த்தேன் குருக்களின் கையில் வேலைக் காணவில்லை. குருக்கள் அங்கையிங்கை வேலைப் போட்டு விட்டுட்டார் போல என்றதொரு சந்தேகம் எனக்கு வலுத்தது. "குருக்களின் கையில் இருந்த வேலைக் காணவில்லையே?" அவ்விடத்தில் நின்ற கூட்டத்தில் ஒருவரைக் கேட்டேன், "வேல் புறப்படும்போது இந்த விருட்சமானது அதிர்ந்ததை நீர் பார்க்கவில்லையா? வேல் சென்றுகொண்டிருக்கும் காட்சியை ஞானதிருஷ்டியினால் கண்டுகொண்ட அன்பர்கள் ஆனந்தக்கூத்தாடியதைக் கவனிக்கவில்லையா?" என திருப்பி என்னிடம் கேள்வி கேட்டார். இதை நம்புவதா? இல்லையா? என்று நான் நினைத்தபடி கோவிலருகே வந்துகொண்டிருந்த வேளை, கோவில் முகப்பு மண்டபத்திலிருந்த ஒரு சித்தர் எனையழைத்து, என்னிடம் ஏற்பட்ட சந்தேகத்தையும் சொல்லி, ஓர் உண்மைச் சம்பவத்தையும் உரைத்தார்.

கொழும்பிலிருந்து ஓர் அன்பர் முருகனைத் தரிசிப்பதற்காகத் தனியாகக் காரில் வந்துகொண்டிருந்தார். அன்றுதான் கதிர்காமத்திலிருந்து "வேல்" சந்நிதிக்குத் திரும்பும் நாள். வடமராட்சியைச் சேர்ந்த அவரின் கார் ஓடமுடியாமல் நடுவழியில் நின்றுவிட்டது. காடு, நடுநிசி, இருட்டு - இவற்றிடையே அவ்வன்பர் மிகக் கவலையுடன் காரில் அசந்துபோனார்.

மிகவும் வயதான ஓர் அடியவர் வந்து "ஏன் நிற்கின்றாய்?" என்று கேட்க, இவர் விபரம் சொல்ல, "நானும் சந்நிதிக்குப் போகவேணும்" என்று காரில் ஏறி உட்கார்ந்து, "காரை எடு" என்று சொல்ல, அவர் காரை ஸ்ராட் செய்தார். காரும் ஓடத்தொடங்கியது. இடைக்காட்டு வெளியில் கார் வந்துகொண்டிருந்தபோது, ஓடிக்கொண்டிருந்தவர் பின் சீற்றிலிருந்த வயதானவரைப் பார்த்து "இன்னும் வேல் வரவில்லைப்போலும், ஆரவார மொன்றையும் தெரியவில்லை. நான் உங்களை தொண்டைமானாற்றுச் சந்தியில் இறக்கிவிட்டு வீட்டுக்குப்போய் குளித்துவிட்டு திருவிழாப் பார்க்க வருகிறேன்." என்று சொல்லிவிட்டு தொண்டைமானாறு சந்தியை அடைந்தவுடன் காரை நிற்பாட்டி கதவைத் திறந்து பின்னால் பார்க்க அவ்வடியவரைக் காணவில்லை.

சந்நிதிக்கு வேல் வந்துவிட்டது என்றவுடன், காண்டாமணி ஓசை கேட்டது. அவர், "முருகா... நீதான் என்னுடன் காரில் வந்தனீயா..." என்று அப்படியே காரை விட்டு கோவிலைநோக்கி "முருகா... முருகா... முருகா..." என்று கோஷம் எழுப்பியபடி ஓடி, விழுந்து, புரண்டு, அழுதழுது வணங்கினார்.

K.S. கண்ணன்
(நாதஸ்வர வித்துவான்),
நல்லூர், யாழ்ப்பாணம்.

# தெரிந்தோ, தெரியாமலோ ஆலயத்தில் செய்யும் தவறுகளும், இதனால் ஏற்படும் குறைபாடுகளும்

சென்றவருடம் சந்நிதியில் வைத்து, வதிரியைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் அம்மா, தெளிவாகக் கதைக்கமுடியாத, புத்திக்குறைவான தனது 22 வயதுள்ள மகனைச் சுகப்படுத்தித் தரவேண்டும் எனக் கேட்டார். ஓர் ஆலயக் குறைபாட்டினால் வந்த துன்பம் இதுவென்றேன்.

"உங்கள் வீட்டிற்குக் கிட்ட உள்ளகோயில்தானே. எந்தவொரு கட்டடமும் இல்லை. மரத்திற்குக்கீழே புற்றுக்களும் பாம்புகளும் இருக்கின்றன. அருகில் இரண்டு பாறாங்கற்கள் மட்டும் பூசையில் இருக்கின்றன. அந்த இடத்தில் பெரும் தவறு நடந்திருக்கின்றது. அன்றிரவே உங்கள் மகனுக்கு துன்பம் ஆரம்பித்தது" என்றேன்.


"ஓமோம்... வதிரியில் முதலி கோயில். தம்பிக்கு ஐந்து வயதிருக்கும். அப்போது கோயிலுக்குப் பக்கத்துவீட்டில் திருமண நிகழ்வொன்றுக்கு சென்றவேளை அக்கோயில் வளவில் வேறு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். தம்பியையும் அதிலை விட்டுட்டுச் சென்றுவிட்டேன். அன்றிரவு காய்ச்சல் ஆரம்பித்தது. அதன்பிறகுதான் இவ்வளவு துன்பமும். ஆனால் கோயிலிலை என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது" என்றார். அங்கே பூசையிலுள்ள வணக்கம் செலுத்துகின்ற பாறாங்கல்லின்மீது உங்கள் மகன் ஏறியிருந்து விளையாடி, சிறுநீரும் கழித்து அசிங்கப்படுத்தினார் என்றேன். இந்தஇடத்தில் எல்லோர் மனதிலும் ஒரு கேள்வி எழும். "சிறு பாலகன் தெரியாமல் செய்த தவறைத் தெய்வம் மன்னிக்கலாம்தானே"

ஆண்டவன் வகுத்த சட்டமொன்று இருக்கு. அந்த சட்டவரைமுறைகளுக்கு கட்டுப்பட்டதுதான் வாழ்க்கை. அல்லது பயம்+பக்தி - பயபக்தி என்றும் சொல்லுவார்கள். பெற்றோர், பெரியோர் என்போர் முன்னறிவுடன் நடக்கலாம்தானே. அண்மையில் ஓர் ஆலயத்தில் பார்த்தேன். ஒருபிள்ளை சத்தியெடுத்தவுடன் சத்தியைத் துடைத்துவிட்டு வெளியில் இருந்த ஒரு விக்கிரகத்தை தாயார் அதே கையால் தொட்டு வணங்குகினார். யாராயிருந்தாலும் பக்தி, அன்பு இதயத்தில் இருக்கவேண்டியது. ஆலய வெளிப்பிரகாரங்களில் இருக்கும் விக்கிரகங்களைத் தொட்டோ, கட்டித்தழுவியோ வணங்குதல் கூடாது. இது குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்ட நிகழ்வே.

இதேபோல் பூமாலை கட்டும் ஒரு குடும்பம் தங்களது உறவுக்கார மரணவீட்டிலும், செலவிலும் கலந்துகொண்டுவிட்டு அன்றையதினமே மாமிசத்தையும் சாப்பிட்டுவிட்டு பிள்ளையார் ஆலய நிர்வாகத்திற்கு தங்களது ஆசூசத்தைச் சொல்லாமல் பிள்ளையாருக்கு சாத்துப்படிவேலை செய்தார்கள். அன்றிரவிலிருந்தே பெரும் துன்பத்திற்காளாகி ஆறு மாதங்களாக கொழும்பு வைத்தியசாலையிலும் வைத்தியம் செய்தும் எதுசுகமும் அடையாமல் அடியேனிடம் வந்தார்கள். தாங்கள் செய்த தவறை ஒத்துக்கொண்டார்கள். பின்பு அதே பிள்ளையார் ஆலயத்திற்கு அனுப்பி 108 தடவைகள் வீதியைச் சுற்றிவர தோப்புக்கரணம் போடவைத்து வேறுபல பிராயச்சித்தங்களையும் செய்வித்தபோது சுகமடைந்தார்கள். இன்றைய சாதாரண சூழ்நிலையினால் பல ஆலயங்களில் சிலநாட்கள் தொடர்ச்சியாக மிகப் பெருந்தொகைப் பணம் செலவழித்து பாட்டுக்கோஷ்டிபோட்டு பாதணிகளுடன் நின்று தீய சொற்களடங்கிய பாடல்கள் பாடி ஆட்டம்போடுகிறார்கள். அங்கே வன்னியில் திண்டாட்டம். இங்கே கொண்டாட்டம். மிகுதி இறைவனின் தீர்ப்பு. இப்படியான நிகழ்வுகளை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா சொல்லிக் கவலைப்படுவார். சுவாமியவர்கள் சென்றவாரம் பளைக்கும், வன்னிக்கும் சென்று இரவு விளக்குகள் இல்லாத பலருக்கு நேரில்சென்று அரிக்கன் விளக்குகள் வழங்கியுள்ளார்.

உ

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் - தொண்டைமானாறு
Sri Selvasannithy Temple - Thondaimanaru



க. உலககுருநாத ஐயர்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய
2010ம் ஆண்டு மகோற்சவ உரிமையாளர்

## பிரதமகுரு ச.கந்தசாமிஐயர் உலககுருநாதஐயர் அவர்களின்

## ஆசியுரை

யாழ்ப்பாண மாவட்டத்திலே வடமராட்சிப் பிரதேசத்தில் சிறப்புநாமம் உடைய தொண்டைமானாறு என்னும் ஊரினிலே செல்வச்சந்நிதி முருகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். முருகப்பெருமான் மருதர் கதிர்காமரிடம் நேரில் தோன்றி தனக்கு மௌனபூசை ஆற்றவேண்டுமென கேட்டுக் கொண்டதற்கிணங்க, மருதர் கதிர்காமரும் அவர் வழித்தோன்றிய ஐயர் மாரும் அறுபத்துநான்கு ஆலமிலைகளில் அமுது படைத்துப் பூசைசெய்து வருகின்றனர்.

ஆரம்ப தோற்றமாக மிகச்சிறு கொட்டிலாக தோற்றம்பெற்ற ஆலயம், பெருமான் தன் பிரத்தியட்ச மகிமை அருளாட்சியால் பல சித்தர்களையும், எண்ணுக்கணக்கற்ற அடியார்களையும் தன்னகத்தே ஈர்த்தெடுக்கப்பட்டு இன்று மிகப் பிரமாண்டமான வளர்ச்சியைப்பெற்று விளங்குகின்றது. "சந்நிதி" என்ற சொல் பொதுவாக இறைவன் இருக்கும் கோயிலைக் குறிப்பதற்குப் பயன்பட்டாலும், இங்கு சந்நிதியே கோயிலாக உருவாக்கப்பட்டுள்ளமை சந்நிதிமுருகன் ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திறன்மிகு சந்நிதிஐயனின் தேர்த்திருவிழாவன்று சந்நிதியான் பால் ஈர்க்கப்பட்ட அன்பர் திரு. சி.சிவகுமார் அவர்களால் இவ்வருடமும் இரண்டாவது தடவையாக பெருந்தொகையான நூல்களை அடியவர்களுக்கு இலவசமாக வழங்கும் நற்செயலானது பெருமானின் அருள் ஊற்றெனத் திடமாக நம்புகிறேன். இப்பணியானது இலங்கை மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் சந்நிதிப்பெருமானின் மகிமையை எடுத்துச்செல்வதுடன், எமது சமயவளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பாக இருக்கின்றது. இப்பணி மென்மேலும் விரிவடைய கந்தப்பெருமான் அருள் வழங்குவாரென வாழ்த்தி, எனது நல்லாசிகளையும் வழங்குகிறேன்.

**- கந்தசாமிஐயர் உலககுருநாதஐயர்**

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

செல்வச்சந்நிதி வேலவனின் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற நூலினை திரு. சி. சிவகுமார் அவர்கள் 2009ம் ஆண்டில் இலவசமாக கந்தன் அடியவர்களுக்கு வழங்கியதோடு, தொடர்ந்தும் சந்நிதி வேலவனின் அருளினால் இவ்வாண்டும் தேர்த்திருவிழா அன்று வெளியிட்டு இலவசமாக வழங்கப்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலின் வெளியீட்டாளரான திரு. சி. சிவகுமார் அவர்கள் பல வருடங்களாக வல்வை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாவிலும் பல நூல்களை வெளியிட்டு இலவசமாக வழங்கி வந்துள்ளார்.

இந்நூல் எமது பிரதேசத்தில் மட்டுமல்ல உலகமெங்கும் பரந்து வாழும் கந்தன் அடியவர்கள், சமய ஆர்வலர்கள், மற்றும் பெருமானின் அற்புதங்களை அறியாதவர்களும் அறிந்துகொள்ளும் ஓர் அற்புதமிக்க வெளியீடாகும். இந்நூலின் வெளியீட்டாளர் முருகப்பெருமானின் ஆசிகளுடன் மேலும் பல நூல்களை வெளியிட்டு எம் சமூகத்திற்கு ஆன்மீக நல் வழிகாட்டல்களை வழங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இ. வரதீஸ்வரன்
பிரதேச செயலர்
பருத்தித்துறை.

அறுகம்புல் வழிபாடா? அத்வைத மேன் நிலையா?
அருவமா? உருவமா? அருவுருவக் கொள்கைகளா?
துறவா? இல்லறமா? தூயநற் பெருவாழ்வா?
அறமா? அன்பா? அழியாத பேரின்பமா?
அன்னதானம் வழங்கலா? அன்புருகத் தொண்டுபுரிதலா?
எது உனக்குத் தேவை? இருக்கிறதே இந்துமதம்!
ஆண்டாண்டு காலமாய் அழியாமல் வந்தமதம்!
ஆனால் எம்மக்களின் அவலநிலை காணீரோ?
பேணாமல் போய்விட்டால் பின்னர் இவை நிலைத்திடுமோ?
இருந்த இடத்தில் என்றும் தேர் இருக்கும்?
எம்பெருமான் கருவறைக்குள் சிலந்தி வலை இருக்கும்!
வறண்ட மனிதம் வளர்ந்து பெருகாவிடில்
வடம் இருக்கும்! வடம் பிடிக்க மனம் இருக்குமோ?

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය වඩමරාච්චි දකුණ හා බටහිර, කරවෙට්ටි.
பிரதேச செயலகம், வடமராட்சி தெற்கு-மேற்கு, கரவெட்டி
**Divisional Secretariat Vadamaradchy South -West, Karaveddy**

---



## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

வடமராட்சிப் பிரதேசத்தின் தொண்டைமானாறு பகுதியில் அமைந்திருக்கும் சரித்திரப் பிரசித்திவாய்ந்த செல்வச் சந்நிதி ஆலயத்தின் இவ்வாண்டுக்கான மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எமது நாட்டின் தென்பகுதியில் கதிர்காமத்திருப்பதியிலே அமர்ந்திருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவனவெல்லாம் வழங்கி முருகன் அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றான். வடபகுதியிலே சந்நிதி வேலனாக அன்னதானக்கந்தனாக நாடிவருவோர்க்கு ஆறுதலை அளித்து அபயமளித்து வருகின்றான். சந்நிதியானின் பாதக்கமலத்தைப் பணிந்தவர்கள் எல்லாக் குறைகளும் நீங்கி சகல செல்வங்களையும் பெற்று சௌபாக்கியங்களுடன் வாழ்வதை நாம் காணமுடிகிறது.

அற்புதங்கள் பல செய்து மக்களை ஆட்கொண்டு அருள்பாலிப்பவன் கந்தப்பெருமான். ஆணவத்தை அழித்து தர்மவழியிலே பேரின்பப் பெருவாழ்வு வாழ முடியுமென்பதை சூரசங்காரத்தின் மூலம் நிருபித்துத் தன்னை நம்பியிருக்கும் பக்தர்களுக்கு நிழலாக இருந்து அபயமளிப்பவனும் அவனே. உலக மக்கள் அனைவரும் சாந்தி, சமாதானம், அமைதி பெற்றுப் பெருவாழ்வு வாழ அருள்பாலிக்க வேண்டுமென எல்லாம்வல்ல செல்வச் சந்நிதியான் பாதங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

*சி. சத்தியசீலன்*
பிரதேச செயலர்,
கரவெட்டி.

### முருகன்

*முருகு என்றால் அழகு என்பார்கள். இந்த சொல்லுக்கு இளமை, அழகு, மணம், கடவுள், தன்மை, தேன் என்று பல பொருள்களும் இருக்கிறது. ஆதலால் முருகன் மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாத நறுமணமும் நிறைந்த தெய்வத்தன்மையும் தெவிட்டாத இனிமையும் உடையவன் என்று பொருள் கொள்ளப்படுகிறது.*
*மெல்லின, இடையின, வல்லின மெய் எழுத்துக்களுடன் உ என்னும் உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு என்றாயிற்று. இம்மூன்றும் இச்சாசக்தி, கிரியசக்தி, ஞானசக்தி இவைகளைக் குறிக்கும் என்றும் சொல்கிறார்கள்*

உ

# சந்நிதிக்கென்றொரு தனித்துவம்

தலையா, கடலலையா என அல்லும் பகலும்
மக்கள்கூட்டம் அலைமோதுவது தேர், தீர்த்தத்தின் தனித்துவம்,
மலை மலையாய் அன்னம் குவிவதும்,
மடங்கள் பல குளிர்சோலையென சூழ்ந்திருப்பதும்,
நிரை நிரையாய் நின்று அன்பர்கள் அன்னம் உவப்பதும்
நீண்ட வரலாறு – சந்நிதிக்கே தனிச் சிறப்பு !
வரிசை வரிசையாய் பற்பலரக காவடிகள் வருவதும்
வாரிசு வாரிசாய் வாய்கட்டிப் பூசையாற்றுவதும்,
நுரை நுரையாய் ஆழிநீர் எடுத்துவந்து
நூதனமாய் வைகறைப் பொங்கலின் முன்பே விளக்கேற்றுவதும்,
கொட்டும் பறைமுழங்கப் பூசை நடப்பதும்
கோவணப் பண்டாரக் கந்தனவன் மகிழ்ந்தருள் புரிவதும்,
அற்புத ஆற்றினிலே அடியார் நிறைந்து நீராடுவதும்,
ஆலிலையில் பருப்புக் கறியுடன் அமுது படைத்து நிவேதிப்பதும்,
கதிர்காமத்தையன் திருவிழாவிற்கு வேல்விடுவதும்,
நிறைவில் மீண்டு வேல் வருவதும், – வந்த களைப்பாற நடுநிசியில்
பயத்தம் துவையலும் இளநீருமுண்டு பெருமான் பசியாறுவதும்,
ஆற்றொணாத் துயரமதில் அன்பர்கள்
நேர்த்திகள் நேருவதும், பூவரசமரத்தில் நேர்த்திகள் கட்டுவதும்
மாற்றமுடியா நோய்பிணிகள் மாற்றம் பெறுவதும்,
மாணிடம் மாண்புற்று மகிழ்வில் மிதப்பதும்,
நன்றிப் பெருக்காக வெள்ளியினாலும், தங்கத்தினாலும்
வேதனை தீர்த்த பெருமானுக்கு வேல் வழங்குவதும்,
தேறமுடியாத் துஷ்டசுரர்கள் வருடாவருடம் சங்காரமாவதும்,
அவதியுறுவோரும், ஆதரவற்றோரும், ஞானிகளும்
புண்ணியனார் சமாதிப் பூவரசமரத்தடியில் அடைக்கலம் புகுதலும்,
அவன் நிழலில் வாழ்தலும், அமுதுண்பதும், ஆற்றல் பெறுவதும்,
பாடுவதும், ஆனந்தக் கூத்தாடுவதும், மோட்சமடைவதும்
மந்திரமின்றிப் பூசை நடப்பதும்,
மந்திரத்தால் வெல்ல முடியாதவனுமாகிய
சந்நிதியானின் தனித்துவமே!

ஸ்ரீவாணி

# தொண்டருக்குத் தொண்டனான சந்நிதியான்

கடந்த 2009ம் வருடம் இரதோற்சவத்தன்று. **"சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்"** என்ற நூல் 10,000 பிரதிகாளக முருகனடியார்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, இந்நிகழ்வு பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளிவரவேண்டும் என்பதற்காக 3 புத்தகங்களை பத்திரிகைக் காரியாலயங்களில் வழங்கினேன்.

அன்றிரவு வேற்பெருமான் கேட்டார். "நான் உருவாக்கித்தந்த புத்த கத்தை முதலில் எனக்குத் தராமல் வேறிடம் கொண்டுபோய்க் கொடுத்து விட்டாயே. கொஞ்சப் புத்தகங்களை எனக்கும் தாவேன். திரும்பத் திரும்பப் படிக்கப் படிக்கச் சுவையூறும் இப்புத்தகத்தின் மீது ஒரு கரும்புத்துண்டும் பட்டுத்துண்டும் வைத்துத் தா" என்றார். 11ம் திருவிழாவிலன்று 9 புத்தகங்களை தட்டில் வைத்து இவற்றின்மீது கரும்புத் துண்டும் பட்டுத்துண்டும் வைத்துப் பெருமானுக்குச் சமர்ப்பித்தேன்.

அவ்வேளையில் பெருமான் அடுத்த செயற்பாடுபற்றி விளக்கினார். "எனது அலங்காரத்தையும், எனது பூசை முறையையும்தான் எல்லோரும் கவனிக்கிறார்கள். என்மீது அன்புப் பெருக்கோடு பல இடங்களிலிருந்தும், பாதயாத்திரையாகவும் ஓடிவரும் அடியவர்கள் பற்றிச் சிந்திக்கிறார்கள் இல்லையே. தேர், தீர்த்த நாட்களில் நெடுநேரம் காத்துநின்று கிணற்றில் நீர் அள்ளிக் கால்கழுவ மிக நீண்ட நேரம் துன்பப்படப் போகின்றார்கள். பிர தேச செயலரிடம் சொல்லி கிணற்றுக்கருகில், கவனிப்பாரற்றுக் கிடக்கும் தண்ணீர்த்தொட்டியில் தொடர்ந்து நீர் கிடைக்கக்கூடியதாக விரைவாகச் செயற்படுத்தென்றார். இப்பணியைச் செயற்படுத்தியதன் பிரதிப்பலனாக உயர்ந்த மணிக்கோபுரக் காண்டாமணியிலிருந்து வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் அறிகுறியான இரண்டு மாலைகளை ஒவ்வொன்றாக இரண்டு தடவை வழங்குவேன்" என்ற பாவனையை சந்நிதிப்பெருமான் அகக்காட்சியில் உணர்த்தினார். இப்பணியை, பெருமானின் கோரிக்கையை 13ம் திருவிழாவிலன்று மனம்நிறைந்த அன்புப்பெருக்குடன் பிரதேச செயலர் அவர்கள் உடனடியாகவே செயற் படுத்தினார். ஒரேநேரத்தில் பலபேர் கால் கழுவக்கூடியதாக பல பாத்திரங்களும் வைக்கப்பட்டு தொடர்ந்து தொட்டியில் குழாய்மூலம் நீர் வழங்கப்பெற்றுக் கொண்டிருந்தது. 14ம் திருவிழாவிலன்று நற் சுபதினத்தில் முதலாவது மாலையை சந்நிதிப்பெருமான் செயலர் அவர்களுக்கு, ஒரு சிறப்பு நிகழ்வை வழங்கிவிட்டார். இற்றைவரைக்கும் வெள்ளிக்கிழமை தோறும், விசேட தினங்களிலெல்லாம் தொட்டியில் நீர் நிறைந்திருக்க அடியார்களெல்லோரும் தொட்டியில் நீர் அள்ளிக் கை,கால் கழுவுவதைப் பார்க்கும்போது அடியார்கள்மீது முருகப்பெருமான் அளவற்ற கருணை வைத்திருப்பதற்கான அன்புநிலை புரிகின்றது. முருகனவன் சந்நிதியில் கோயில்கொண்ட ஆரம்பகாலம் முதலே ஆலயச் சூழலில் அன்னதான மடங்களை பல்கிப் பெருகவைப்பதற்கான

காரணமும் இம் மடங்களைச் செயற்பெற வைப்பதற்கு பெருமானின் அனுக்கிரகங்களும், அற்புதங்களும் அடியார்கள் துன்பப்படக்கூடாதென்ற பெருங்கருணையாகவே இருக்கின்றது.

2009ம் ஆண்டு வெளியீட்டு முன்னுரையில், ஆலய திருப்பணிக்கு அரசாங்கத்திடம் மனுப்பண்ணியிருந்த நிதியைப் பெருமான் தானே தாமதப்படுத்திப் பற்றிவைத்திருப்பதாகவும், இந்நிதி கிடைக்காமல் போகுமோ வென ஐயா அவர்கள் நினைப்பதாகவும், ஆனால் தேவையேற்படும்போது தருவதாகவும் பெருமான் சொன்னதாகக் குறிப்பிட்டிருந்தேன். சென்ற வருடம் இப்புத்தக வெளியீட்டு வேளையில்தான் இந்நிதியைப் பெறுவதற்கான உத்தரவுக் கடிதம் கிடைத்தாக பிரதேச செயலர்மூலமாக அறிந்தேன். பெருமிதப்பட்டேன்.

"திரும்பத் திரும்பப் படிக்கப் படிக்கச் சுவையூறும் இப்புத்தகம்" என்று முருகன் சொன்னதாகக் குறிப்பிட்டேன். இதைச் சென்ற தேர்த்திரு விழாவிலன்று முதலாவது உணர்வுபூர்வமாக நேரடியாகக் கண்டு கொண்டேன். "சந்நிதியுறை பெருமான் நேரடியாக வந்து ஐயாவுடன் கதைப்பதும், சுற்றுமண்டபத் திருப்பணியை ஆரம்பிக்க வைப்பதும்" பற்றிய ஒருசிறு ஆக்கம் பிரசுரமாகியிருந்தது. இவ்வாக்கத்தை வானொலி அறிவிப்பாளர் திரு. முருகேசு ரவீந்திரன் அவர்கள் அன்றைய தினம் பல தடவைகள் திரும்பத் திரும்ப வானொலியிலும் ஒலிபெருக்கியிலும் உள்ளம்நெகிழ்து அறிவித்துக்கொண் டிருந்ததைக் கேட்டு மெய்சிலிர்த்துப் பெருமானின் பேரருளைநினைந்து கண்கள் பனித்தன. இச்சிறு ஆக்கத்தை மறுபிரசுரமாகக் கீழே தரப்படுகின்றது.

---

சில வருடங்கட்கு முன்பு கனடாவிலிருந்து வந்த அன்பரொருவர் ஏதாவதொரு திருப்பணியைச் செய்யும்படி 20 இலட்சம்ரூபாவை வங்கியில் வைப்புச்செய்தார். இதன்பின் இவர் 2006ம் ஆண்டு தேகவியோகமடைந்துவிட்டார். பணம் அப்படியே இருந்தது.

2008ம் ஆண்டு தெய்வேந்திர ஐயா அவர்களது பூசைநாளில் பகல் பூசையின்போது கும்பங்கள் சுற்றிவரும் வேளையில் கடும்வெய்யில் காரணமாக கால்கள் சிறிது சுட்டுவிட்டன. தொடர்ந்து அந்திப்பூசையும் செய்துவிட்டு, இளைப்பாறுவதற்காக நாவல் மரத்திற்குச் சமீபமாக தனிமையில் உட்கார்ந்திருந்தார்.

**"கால் சுடச்சுட தொண்டாற்றிக் களைப்படைந்துவிட்டாய், பூவரசமரத் தடியில் பஜனை பாடும் அடியவர்களும் வெய்யில் வெப்பத்தினால் துன்பப்படு கின்றார்கள். சுற்று மண்டபத்தைக் கட்டலாம்தானே"** என்று கூறியபடியே சந்நிதான பின்பக்கம் நோக்கிச் சென்றார் ஒருவர். **"இவர்யாரோ விசர்க்கதை கதைக்கின்றார். சுற்றுமண்டபம் கட்டுவதென்றால் கோடிக்கணக்கான காசு வேண்டுமே"** என ஐயா அவர்கள் தனக்குள் நினைக்கின்றார். மீண்டும் அதேயாள் திரும்பிவந்து **"மகனே! நான் விசர்க்கதை கதைக்கவில்லை. வங்கியில் இருக்கிற பணத்தை எடுத்துத்தர ஆளை அனுப்புகிறேன். இன்னும் போதியளவு செல்வம் கிடைக்கவிருக்கிறது. முன்னின்று இப்பணியை நிறைவேற்றுவாயாக"** என்பதைக் கேட்டு ஐயா அவர்கள் யாரது என நிமிர்ந்து பார்த்தார். ஆளைக் காணவில்லை. பெருமான் ஆரம்பித்த பணி இரவுபகலென நடந்து 3 மாதத்தில் கும்பாபிசேகம் இனிதே நடாத்தப்பெற்றது மிகப்பெரும் அநுக்கிரகமே.

## சந்நிதிச் செல்வனிடம் நித்தியப் பேறுபெற்ற அடியார் ம. வெங்கடாசலபிள்ளை ஆசிரியர், இவர் அடியார் மட நிர்வாகி!



சீர்செல்வச் சந்நிதியைச் சேரடியார் தம்மடத்தில்
ஆர்வமிகக் காட்டி யணிபெறவே - நேரெவருஞ்
சொல்லவொண்ணா வவ்விதத்திற் சோர்வற் றியக்கிவந்த
வல்லைவெங்க டாசலத்தைநிதம் வாழ்த்து.

சடைவரத சுவாமிகள் சந்நிதியில்
தோற்றுவித்த அடியார் மடமதை
இடைவிடாமல் நடாத்தி இந்நிலைக்கு வளர்த்து
ஈசன்மகன் பாதமிணைந்தார் ஐயா!
மடைபோல் அன்னம்படைத்து, நண்பகல் 12 ற்கு
மகிழ்வுறச் செய்வார் முருகனடியார்களை
படைபடையாத் திரண்டுவரும் அடியார்கட்கு
பாங்குடனே அமுதளித்தார் பார்போற்றிடவே!
சந்நிதியானின் செவ்வாய் வாரத்தில், பிரதோச
நன்நாளில் சங்கமித்தார் சந்நிதியான் பாதத்தில்

**நீண்ட காலம் தொண்டாற்றினார் அன்னக்கந்தனுக்கு!**
**பூண்ட தவத்திற்கு முத்திப்பேறு வழங்கினான்**
**பூவரசமரத்தடியான்!**

*(ஐயா அவர்கள் சென்றவருட வெளியீட்டில் ஓர் ஆக்கம் எழுதி பிரசுரமானது. சிறுவயதிலிருந்தே முருகனிடம் எவ்வளவு அன்புநிலை பூண்டார் என்பதைக் காணலாம். ஐயாவின் ஞாபகார்த்தமாக இம்முறையும் அதன் ஒரு பகுதி மறுபிரசுரமாகின்றது)*

## அன்னதானக் கந்தனை அன்னமலையில் கண்டேன்

நானும் எனது நண்பரொருவருமாகக் கால்நடையில் ஒரு வெள்ளிக்கிழமை காலை ஆறு மணியளவில் சந்நிதியைச் சென்றடைந்தோம். அப்பொழுது மூலஸ்தானத்தின் கதவுக்கு முன்னிருந்த திரை நீக்கப்பட்டுத் தீபாராதனை நடந்தது. பக்த அடியார்களெல்லாரும் அரோகரா கோசத்துடன் அப்பன் வேலனைத் தரிசித்தனர். மூலஸ்தானம் திறவாது பூசை நடந்தது ஏனென விசாரித்த பொழுது முதனாட் பூசை செய்தவர் திறப்புக் கொடுக்க மறந்துவிட்டார் என அறிந்தேன். இங்கே ஒருநாளைக்கொருவர் பூசை செய்வது வழக்கம். அன்றைய பூசைக்குரியவர், முருகனை வழிபடுவதற்கு வந்த இரும்புவேலை செய்பவர் ஒருவர் மூலம் மடைப்பள்ளிக் கதவைத் திறப்பித்து அங்கே அமுது சமைத்து அவ்வன்னத்தை வாசற்படியில் மலைபோலக் குவித்து அதன் மேலொரு வேலை ஸ்தாபித்துப் பூசை நடந்தது. அன்னதானக் கந்தனை அன்னமலைமீது மனமகிழ்வுடன் தரிசித்து வீடுவந்தேன். இது நடந்தது 1938ம் ஆண்டு தைமாதம். அன்று வழமைபோலப் பாடசாலைக்குச் சென்றேன். பாடசாலையில் கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகத் தலைமையாசிரியர் தெரிவித்தார். அன்று தொடக்கம் கால்நடையாகவும் துவிச்சக்கர வண்டியிலுமாகச் சென்று அப்பனைத் தரிசித்து வந்தேன். ~ **ம. வெங்கடாசலபிள்ளை**

"அடியார் மடத்தில் மாஸ்டர் என்ற ஒருபெரியவர் இருக்கின்றார். அவருடைய இடத்தில் எப்போ சென்றாலும் அவருடைய இன்முகத்துடனான வரவேற்பும், உபசரிப்பும் அடியார்களை முருகன் அழைப்பதுபோல் தோன்றும். அவருடைய மடத்தில் கந்தனுடைய காட்சியைக் கண்டு மிக மகிழ்ச்சியுடன் மனம் பூரிப்படைவேன். அவரும் முருகன் அருளையும் புகழையும் என்னிடம் கூறும்போதெல்லாம் எனது கண்கள் பனிக்கும். காதுகள் இனிக்கும்." மேற்சொல்லப்பெற்றவை சென்றவருடம் வெளியிடப்பெற்ற சஞ்சிகையில் ஆணைக்கோட்டையைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா அவர்களால் வியந்து எழுதப்பெற்றவை.

சாமியம்மாவிற்குப் பின் ஐயா அவர்கள் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மடத்தை நிருவகித்து வந்தார். பல வெள்ளிக்கிழமைகளில் அன்னதான உபயம் யாரும் செய்ய முன்வராதவிடத்து மடத்தினது சொந்தச் செலவிலேயே அன்னதானத்தை செய்து வந்தார். ஐயா அவர்கள் தனது நிறைவிற்கு முன்பேயே எழுதிவைத்த விடயம் - தனது இறப்பைக் காரணம்காட்டி அன்னப்பணியை இடைநிறுத்தக்கூடாதென்பது. அதேபோல் ஐயாவினது இறுதி நிகழ்வுகள் நடந்து மறுநாளாகிய வெள்ளிக்கிழமையிலிருந்தே அப்பணி நடைபெற்று வருகின்றது. வெங்கடாசலம் ஐயா அவர்களது இன்னுமொரு நிபந்தனை - நண்பகல் 12 மணிக்கு பூஜை, அன்னதானம் நடைபெறவேண்டுமென்பது. பெருமானுடைய அனைத்துத் தினங்களிலும் அதிகளவான அடியவர்கள் விரதமாகவும், தொலைவிலிருந்து வருபவர்களாகவு மிருப்பதனாலும் ஆலயத்தில் தங்கியிருக்கும் முதியவர்களைக் கருத்திற்கொண்டும் நேரம் தவறாமை போற்றுதற்குரிய விடயமாகும். ஐயாவின் விருப்பப்படி இவ்விதிமுறை தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்ற வருட நர்த்திருவிழாவிலன்று முருகனின் அற்புதங்கள் தாங்கி வெளியிடப்பெற்ற புத்தக ஆக்கத்திற்கு ஐயா அவர்கள் பெரும் பங்காற்றினார். ஆக்கங்கள், ஆசிச்செய்திகள், நிதி சேகரிப்பு ஆகியவற்றுக்கு ஒரு துடிப்புள்ள இளைஞனைப் போன்று அடியேனுடன் சேர்ந்து பல இடங்களுக்கும் சென்றார். எங்கள் சமயப் பெருமைகளை, சந்நிதி முருகனின் அற்புதங்களை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பெருநோக்கோடு பெருந்தொகையான புத்தகங்களை தனது சொந்தச் செலவில் முத்திரை ஒட்டி வெளிநாடுகளுக்கும், இலங்கையின் பலபாகங்களுக்கும் அனுப்பிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மடத்திற்கு வரும் புத்தகம் கிடைக்காத அடியவர்கட்கும் புத்தகம் வழங்கிக்கொண்டிருந்தார்.

ஐயா இறைபதம் அடையும்போது வயது 90. இறுதிநாள் வரைக்கும் சுகதேகியாகவே வாழ்ந்தார். தாவரபோசனியான ஐயா அவர்களுக்கு சுகரோ, பிறஷரோ வேறு எந்தவிதமான நோய்களோ அணுகியதில்லை. இறுதிநாள் வரைக்கும் ஒரு லேடிஸ் சைக்கிளில் ஓடித்திரிந்தார். அன்னதானக் கந்தனின் அன்னப்பணிக்கென்றே தன்னை ஒப்படைத்ததனால் ஐயாவை சந்நிதிப்பெருமான் என்றும் நற்சுகத்துடனும், சிவப்பொழிவுடனும் திகழ வைத்தார். முருகனின் அற்புதம் - மரணவேதனை என்பது அற்றநிலையில் ஐயாவின் சீவன் இறைபதம் சார்ந்தது. சாவிற்கு ஒரு சாட்டு என்பார்கள். இதேபோல் ஐயாவின் இறுதி இரண்டு நாட்களுக்கு முன்பு ஒருகண்ணில் நோவு, சிறிது வீக்கம் ஏற்பட்டது. வேறு எந்த வருத்தமுமின்றி வேதனையுமின்றி முருகன் தன்னிடத்தில் அணைத்துக்கொண்டார். இறப்புக்கு முதல்நாள் அடியேன் குடும்பமாக ஐயாவை பார்க்கச் சென்றேன். ஒரு வேட்டிசால்வைப் பார்சலையும், தான் விசுக்கிக் கொண்டிருந்த விசிறியையும் அடியேனிடம் தந்தார். கவலையுடன் இவற்றைப் பெற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்தேன். [illegible] என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ளென்று என் இளைய மகனிடம் ஒப்படைத்தார். மறுநாள் 10 மணியளவில் ஐயா முருகனிடம் சென்றுவிட்டார்.

**உண்மையே கடவுள்**

**- ஐயாவின் சிஷ்யன் சிவகுமார்**

உ

## இப்புத்தக வெளியீட்டுப்பணி தொடரவேண்டுமென்ற சந்நிதிச் செல்வனின் அன்புக்கட்டளை !

சென்றவருடம் (2009) நூல் வெளியீட்டிற்காகச் செயற்பெற்ற அலைச்சல் காரணமாக இவ்வருடம் இப்பணியைச் செய்வதில்லை என்ற தீர்மானத்தில் இருந்தேன். ஆயினும் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு வல்வையைச் சேர்ந்த திரு. கு. அமிர்தலிங்கம் அவர்கள் ஐயாயிரம் ரூபாவைத் தந்தார். "நான் லண்டனுக்குச் செல்லப்போகின்றேன். திரு விழாக்காலத்தில் இங்கு நிற்பேனோ தெரியவில்லை. ஆகையால் சந்நிதி யானின் அற்புதமான உங்கள் வெளியீட்டிறகுப் பங்களிப்புச் செய்யவேண்டு மென்ற விருப்பில் முற்கூட்டியே இப்பணத்தைத் தருகிறேன்" என்றார்.

ஆயினும் மலர்க்குழுவென்று ஒன்று இல்லாமல் தனிநபராக நின்று செயற்பட்டதன் அலைச்சலானது முன்னின்று என்னை அச்சுருத்தியதனால் இவ்வருடம் இப்பணியைச் செய்வதற்கு மனநாட்டமின்றி இருந்துவிட்டேன். சந்நிதியானின் பெருந்திருவிழாவிற்கு குறைவான நாட்களே இருக்கையில், பொக்கற்றில் வைக்கத்தக்களவு சிறிய புத்தகவடிவத்தைக் காட்டி இந்த அளவிலென்றாலும் புத்தகத்தை வெளியீடு செய் என்று முருகன் பணித்தபோது, உள்ளம் நெகிழ்ந்துவிட்டேன். அப்பன் கேட்கின்றான். புத்தகப் பணியை ஆரம்பிப்போம். ஆனால் எப்படிப் புத்தகத்தை நிறைவுசெய்வேன் என்ற ஏக்கமும் அடியேனைத் தளம்பவைத்தது. சென்றவருடம்போல் அலைந்து திரிந்து நிதிசேகரிக்கக்கூடிய காலஅவகாசமும் போதாது.

எனவே, சந்நிதித் தலத்தில் வைத்து அடியேனிடம் அருள்வாக்குப் பெற்றுப் பலனடைந்த பல அன்பர்கள் வடமராட்சியிலும் கொழும்பிலும் இருக்கிறார்கள். அவர்களிடம் போனில் தொடர்புகொண்டேன். கந்தனின் அற்புதம் சுலபமாகவே ஓரளவு நிதி கிடைக்கப்பெற்றது. சென்றவருடம் பத்தாயிரம் புத்தகம் வெளியிடப்பட்டது. இவ்வருடம் ஆறாயிரம் புத்தக மென்றாலும் வெளியிட நிதிப்பற்றாக்குறையாக இருக்கிறதே என நினைத்த போது, வேலவன் சொன்னார், "நாளைய தினம் அடியவனொருவன் உன் னிடம் பெருந்துன்பத்துடன் வருவான். நான் அனுக்கிரகிக்கிறேன் - அவன் துன்பத்தை தீர்த்துவை. இப்புத்தக ஆக்கத்திற்கு அவனுடைய பெரும் உதவியும், நிதிப்பங்களிப்பும் கிடைக்கப்பெறும்" என்றார் அற்புதக் கந்தன்.

முருகன் அனுப்பிய அவ்வன்பர் பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் ஆலய நிர்வாகி. இவர் ஓர் அச்சக உரிமையாளரும் கூட. இவரது தங்கையின் ஆறுமாதக் குழந்தை வைத்தியத்தால் மாற்றமுடியாத நோய்த் துன்பத்தால் அவதியுறுவதாகக் கூறினார். இன்னும்பல பிரச்சனைகளை எடுத்தியம்பினார்.

சந்நிதிப்பெருமானின் ஆலய மண்ணும் சாம்பலும் கலந்து கொடுத் தேன். பாலனின் உடம்பில் தடவி, வீடு வளவெங்கனும் தன்னீரில் கலந்து தெளிக்கும்படி கூறினேன். அடுத்தநாள் மகிழ்ச்சியுடன் போனில் அறியத்

தந்தார் குழந்தை சுகமடைந்துவிட்டதாக. ராத்திரிக் கனாவில் சந்நிதிப் பெருமான் அழகு மயில் மீது காட்சியும் தந்தாரே எனக் கேட்டேன். "ஓமோம்... குழந்தையின் தாயார் (எனது தங்கை) மயில் தோகைவிரித்தாடிய படியே கனாக்கண்டதாகச் சொன்னவர்." என்றார் மிக்க மகிழ்ச்சியுடன்.

"சென்றவருடம் கொடியேற்றத்திற்கு மூன்று மாதங்கட்கு முன்பு புத்தகவேலை தொடங்கிவிட்டேன். இன்னும் குறைந்த நாட்களே இருக் கின்றன. முருகன் புத்தகம் வெளியீடு செய் என்று சொல்கிறார். இப் புத்தக அமைப்பிற்கு தாங்கள் உதவிபுரியவேண்டும் என்பதற்காகவே முருகன் காட்சி தந்தார். இப்புத்தகத்திற்கு நீங்கள் பங்காற்றும்போது பெருமான் இன்னும் பல அருட்கொடைகளை வழங்குவார்" என்றேன்.

"எனது அச்சக மெஷினில் புத்தகம் முழுவதும் அச்சேற்றி, இரவுபகலாயென்றாலும் மேலதிக வேலையாட்களைச் சேர்த்துச்செய்து புத்தகமாக்கி எனது காரிலேயே புத்தகம் முழுவதையும் கொண்டுவந்தும் தருகிறேன். எங்கள் வீட்டிலுள்ள எல்லோரும் இதற்கான காசும் போட்டு, தெரிந்த வேறு ஆட்களிடமும் காசும் சேர்த்துத் தருகின்றேன்" என்றார் மிக்க மனநிறைவுடன்.

சந்நிதிப் பெருமானின் அனுக்கிரகத்தையெண்ணி உள்ளம் பூரித்தது. "நாம் உள்ளமுருகி [illegible] அடி எடுத்துவைத்தால் அவன் எம்மைநாடிப் பல அடி எடுத்துவைப்பான் என்று திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சொன்னது தீர்க்கதரிசனமெனக் கண்டுகொண்டேன்.

இப்புத்தகத்தை அச்சிடத் தொடங்கும்போதே முருகனும் அம் பிகையும் தங்களுக்கு ஒவ்வொன்றாக பலவேண்டுதல்களை நிறைவு செய்ததையும் சொல்லிப் பெருமிதப்பட்டார். ஒன்பது வருடமாக லண்டனி லுள்ள தனது தம்பிக்கு கிடைக்காதிருந்த வதிவிட விஷா கிடைத்தது முதலாகப் பல வெற்றிகரமான விடயங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி முருகனின் திருவருளை எண்ணி வியந்தார். இப்படியாக குறுகிய நாட்களில் இப்பெரிய பணியை சந்நிதிப்பெருமானே முன்னின்று ஆரம்பித்துச் சிறப்புற வைத்தார்.

வதிரியில், புத்திசுவாதீனமற்ற ஓர் இளைஞனை கடந்த நான்கு மாதங்களாகச் சேவை நோக்கோடு பார்வையிட்டு வருகின்றேன். முன்னைய காலங்களில் அடிக்கடி மயங்கி விழுவார். கடந்த இரண்டு மாதகாலமாக மயக்கம் வராமல் நின்றுவிட்டது. அவ்விளைஞனிடம் நம்பிக்கைக்குரிய தெளிவும் ஏற்படத் தொடங்கிவிட்டது. இவருடைய அம்மாவிடம் முருகனின் புத்தகத்திற்கு உதவி கேட்டேன். "கனடாவில் மற்ற மகனிடம் காசுக்கு சொல்லியிருக்கிறேன். வந்தால் பார்ப்பம்" என்றார்.

அடுத்தநாள் அதிகாலை "ராத்திரி தம்பி இரண்டு தடவை மயங்கி விழுந்துவிட்டான். தலையும் வீங்கிப்போச்சுது. ஏன்" என்று போனில் கேட்டா.

பார்ப்பம் [illegible] சொல்லாமல் கனடாவாலை காசு வந்தாப்பிறகு முருகனின் புத்தகத்திற்கு காசு எடுத்து உங்கள் சுவாமித்தட்டில் வையுங்கள். சுகம் வருமென்றேன். என்னிடம் காசு இருக்கிறது. மூவாயிரம் ரூபா தருகிறேன் என்றா. இதன்பின் அவ்விளைஞனுக்கு மயக்கம் சுகமாகிவிட்டது.

# கேட்ட வரம் தந்த கடவுள் சந்நிதி வேலன்

2009ம் ஆண்டு முதற்பதிப்பு (அற்புதங்களும் அனுக்கிரகங்களும்) உதயமாகியது. 19ம் பக்கத்திலே "எனையாளும் பூவரச மரத்தடியான் எனைப் பாடவைத்தான்" என்ற தலைப்பில் முருகன் புரிந்த அற்புதத்தை எழுதக் கிடைத்த பாக்கியம் இந்த ஆண்டும் திரும்பவும் அடுத்த புதிய அற்புதத்துடன் எழுதக் கிடைத்ததையெண்ணி சந்நிதியானிடம் எனையிழந்துவிட்டேன்.

ஔவைப்பிராட்டி பாடிய "அரிது அரிது மானிடராதல் அரிது, அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப்பிறத்தல் அரிது, கூன், குருடு, பேடு நீங்கிப் பிறந்த காலையும் ஞானமும் கல்வியும் நயத்தலரிது" என்றார். பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றெடுத்த இப்பேறு அளப்பரியது. ஆண்டவனைப் பிரார்த்திக்க உகந்தது. பாடுவதும் பஜனை செய்வதும் அவனருட் கடாட்சமேயன்றி வேறொன்றும் அறிகிலேனே. அவனருளால் அவன்தாள் பணிந்து வணங்கும் பேறு பெற்றோம்.

இளம்வயதில் வெட்க சுபாவ கூச்சம் நிறைந்த நேரம். தோத்திர, தேவார பாடல்களைப் பாடத்தெரிந்தும் வெட்கப்பட்ட காலமது. என் தந்தையார் தன்னை மறந்து தோளில் காவடி சுமந்து ஆடினார். என்னை ஆடும்படி நாதஸ்வரம் வாசிக்கும் எனது மாமனார் பலதடவைகள் வற்புறுத்தினார். நான் பலமுறை மறுத்தேன். எமது புலோலிக் கிராமத்தில் இருந்து செல்வச்சந்நிதி வேலவன் சந்நிதானம் காவடி வந்து சேர்ந்த போது என்நிலை மறந்தே ஆடினேன். என்னால் ஆடாமல் நிற்க முடியவில்லை. அந்தளவிற்கு என் உள்மேனியில் ஒருவகையான குளிர்மை உட்புகுந்தவிட உடம்பை உலுக்கி எனையாட்டிய தன்மையை பரிபூரணமாக உணர்ந்து கொண்டேன்.

சென்ற ஆண்டு எனது மகன் பிரான்சிற்கு சென்று இடைவெளியில் சிறைப்பட்டுத் துவண்டபோது, நாம் சந்நிதியானிடமே வந்து கண்ணீர் வடித்தோம். கடன்பட்டுப் பிள்ளையை அனுப்பினோம். திருப்பி அனுப்பிப் போடுவார்களோ எனப் பயந்தோம். இப்புத்தக ஆசிரியர் சிவகுமார் எம் கண்ணீரைக் கண்டு முருகனிடம் கேட்டு ஆறுதலான சரியான வாக்குச் சொன்னார். ஒரு நேர்த்தியும் முருகனுக்குச் செய்யச்சொல்லிச் சென்னார். அந்த வாக்கின்படி இந்த ஆண்டு சிறைமீண்டு மகன் பிரான்ஸ் சென்றடைந்து விட்டார். எம் சந்நிதி முருகப் பெருமான் அருளால் பல தடங்கல் எல்லாம் சுலபமாக முடிவுறுவதை என் கண்கூடாகக் கண்டு வருகிறேன். சில சோதனைகள் இல்லாமல் இல்லை. நட்ட பயிர் வாடித்தான் தழைக்கும். அதேபோலவே என் வாழ்வும் வாடிய பயிர் போல் வாடிப் பின் தழைப்பதை சந்நிதியானையும், எம் அருகிலுள்ள வில்லிபாதி முருகனையும் பற்றிப் பிடித்ததனால் உணர்ந்து கொண்டேன். இதுதான் உண்மை.

*புலோலியூர்.*

**–சின்னப்பு தனபாலசிங்கம்**

## சந்நிதியான் திரு முன்பாகச் செல்வோமேயானால் எல்லாப் பேறுகளையும் பெற்றுக்கொள்வோம்!

## முருகனது கருணையையும் சூரனது தன்மைகளையும் கண்டு வியந்து உருகும் கச்சியப்ப சிவாச்சாரியார்

சூரபன்மனால் சிறையில் அடைக்கப்பட்டு அதன் காரணமாக கொடிய சிறையில் வருந்திக் கொண்டிருக்கின்ற இந்திரனது மகனாகிய சயந்தனையும் ஏனைய தேவர்களையும் மீட்பதற்காக முருகப்பெருமான் தன் துணை வர்களாகிய வீரவாகு முதலாகிய ஒன்பது தம்பியரோடும் ஒரு லட்சம் நந்திக்கண வீரர்களோடும் இரண்டாயிரம் வெள்ளம் என்ற அளவுடைய பூதவீரர்களோடும் சூரனுடைய தலைநகராகிய வீரமாமகேந்திர புரத்துக்கு வருகின்றார். முருகப் பெருமானுடைய சேனைகளுக்கும் சூரனுடைய சேனைகளுக்கும் இடையில் பத்து நாட்கள் யுத்தம் நடைபெற்றது.

முதல் யுத்தமானது சூரன் மகனாகிய பானுகோபன் தலைமையிலும், அவர்களுக்கு எதிராக முருகப்பெருமான் துணைவராகிய வீரவாகு தலைமை யிலும் நடைபெற்றது. அன்றையதினம் பானுகோபன் என்பவன் வீரவாகுவின் திறமையான எதிர்ப்பினால் பின்வாங்கிச் செல்கின்றான். எனவே இரண்டாம் நாள் யுத்தத்துக்குச் சூரன் என்பவன் தானே தலைமை தாங்கிச் சென்று பூத சேனைகளையும், நந்திக்கணத்தில் வந்துதித்த ஒரு லட்சத்து ஒன்பது வீரர்களோடும் மோதி அவர்களுடைய வலிமைகள் யாவற்றையும் அழித்து நிற்கின்றான்.

அதனைக்கண்ட முருகப்பெருமான் தமது தேர்ச்சாரதியாகிய வாயு தேவனைப் பார்த்து, தமது தேரைச் சூரனுக்கு சமீபமாகச் செலுத்தும்படி பணிக்கின்றார். அவ்வாறே வாயுதேவனும் முருகனது நவமணித்தேரைச் சூரனுக்கு முன்பாகச் செலுத்தி நெருங்குதலும், சூரபன்மன் முதல் முறை யாக, முருகப்பெருமான் போர்க்கோலத்தோடு வரும் ஒப்பற்ற அரிய தோற்றத் தைக் காண்கின்றான். இந்த இடத்திலே கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு அழகாகக் கூறுகின்றார்.

*ஆயது காலை தன்னில் அவுணர்கோன் அனந்த கோடி*
*ஞாயிறு திரண்டொன்றாகி ஞாலமேல் இருளை ஓட்டிச்*
*சேயுயர் விசும்பை நீங்கிச் செரு நிலத்துற்ற தென்ன*
*தூயதோர் குமரன் போரில் தோன்றிய தோற்றம் கண்டான்.*

அந்த வேள்வியில் அந்தச் சூரனானவன், எண்ணற்ற சூரியர்கள் ஒன்றாகத் திரண்டுவந்து பூமியின் மீது இருக்கும் இருளைப்போக்கி, அதி உயர்ந்த ஆகாயத்தினின்றும் நீங்கி இந்தப் போர்க்களத்தில் இறங்கி நிற்கின்றார்களே என்று நினைக்கும்படியான குமரப்பெருமானுடைய தோற் றத்தைக் காண்கிறான்.

*முண்டகம் மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணும்*
*குண்டல நிரையும் செம்பொன் மௌலியும் கோலமார்பும்*
*எண்தரு கரம் ஈராறும் இலங்கெழிற் படைகள் யாவும்*
*தண்டையும் சிலம்பும் ஆர்க்கும் சரணமுந் தெரியக் கண்டான்.*

தாமரை மலர்கள் மலர்ந்து விளங்கியதோ என நினைக்கும் வண்ணம் தோற்றமளிக்கும் ஆறு திருவதனங்களையும் பன்னிரண்டு திருக்கண்களையும், பன்னிரண்டு திருச்செவிகளிலும் சமதோற்றத்தோடு விளங்குகின்ற குண்டலங்களையும், செம்பொன்னாற் செய்யப்பட்ட ஆறு கிரீடங்களையும், அழகிய மார்பினையும், பன்னிரண்டு திருக்கரங்கைளையும், அந்தக் கரங்களிலே ஒளியோடு விளங்குகின்ற அழகிய படைக்கலங்களையும், சிலம்பும் சதங்கைகளும் ஒலித்துக்கொண்டு இருக்கின்ற திருப்பாதங்களையும் சூரபன்மன் காணுகின்றான்.

இந்தச் சந்தர்ப்பத்திலே கச்சியப்ப சிவாச்சாரியாருடைய மனதிலே சூரன் எவ்வாறு தென்படுகின்றான் என்று பார்ப்போம். இந்தச் சூரன் என்று அழைக்கப்படும் அசுர தலைவனானவன் முன்னை நாட்களிலே கடுந்தவங்களையெல்லாம் செய்த தன்மையும், உலகத்திலே அழிவற்றவனாகி பல யுககாலங்களாக இருந்ததாகிய தன்மையும், வேதங்களாலும் அறியமுடியாதவரும் ஆறு திருவதனங்களையுமுடைய முருகப்பெருமானுடைய ஒப்பற்ற பேரழகோடு விளங்குகின்ற அழகிய காட்சியைப் பார்த்துப் பெரிய பயனை அடைவதற்குத் தானோ என்று கச்சியப்ப சுவாமிகள் நினைத்துப் பார்க்கின்றார்.

*சூர் எனும் அவுணர் கோமான் தொல்லைநாள் தோற்றவாறும்*
*பார் இடை முடிவின்றாகிப் பல் உகம் இருந்தவாறும்*
*ஆரணம் அறிதல் தேற்றா ஆறுமாமுகத்து எம் ஐயன்*
*பேர் எழில் உருவம் நோக்கிப் பெரும்பயன் கோடற்கேயோ.*

என்று வியந்து நிற்கின்றார். அதுமாத்திரமல்ல. அழிவில்லாத வரம் பெற்றவனாகிய சூரன் இந்த முருகனோடு யுத்தம் செய்து அழிந்து போனால் என்ன? அழியாது விட்டாலும் என்ன? அதனாலே ஒன்றும் இல்லை. ஏனென்றால் பரிசுத்தமான அறிவுடையவர்களாலும் கூட மனத்தினாலும் அறியமுடியாத நிர்மலராகிய முருகப்பெருமானுடைய சிவந்த அக்கினி போலும் ஒளியுடைய திருமேனியைக் கண்டபடியினாலே தான்செய்த தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்று உய்வழி அடைந்துவிட்டான் என்று கச்சியப்ப சுவாமிகள் எண்ணுகிறார்.

*எஞ்சல் இல் அவுணர் செம்மல் இங்ஙனம் அமரதாற்றித்*
*துஞ்சில்என் தொலைவுற்றால் என் தூயவால் அறிவின் மிக்கோர்*
*நெஞ்சினும் அளத்தற்கொண்ணா நிருமலக் குமர மூர்த்தி*
*செஞ்சுடர் வடிவம் கண்டு தீவினை நீங்கி உய்ந்தான்.*

இந்தப் பூவுலகம் முதலாகக்கொண்டு இதேபோன்ற இன்னும் ஆயி

ரத்து ஏழு அண்டங்களையும் பரிபாலிக்கின்றவனாகிய சூரனை, கொடுமையான வினைகளையெல்லாம் செய்தவொரு கொடுங்கோலன் என்று எல்லோரும் கூறுகின்றார்கள். ஆனாலும் சிறப்பு மிகுந்தவராகிய குமரப் பெருமானுக்கு முன்னிலையில் வந்துவிட்டான் என்று சொன்னால், அந்தச் சூரன் என்பவன் தவத்திலே மாத்திரம் மேம்பட்டவன் *அல்ல. தர்மத்திலேயும்* மேம்பட்டவனாக விளங்குகின்றான் என்று கச்சியப்ப சுவாமிகள் ஆச்சரியமடைந்து நிற்கின்றார்.

*பூவுலகு அண்டம் எல்லாம் புரந்திடும் சூரன் தன்னைத்*
*தீவினையாளன் என்றே செப்புவர் சிறப்பின்மிக்க*
*மூவிரு முகத்து வள்ளல் முன்னர் வந்தெய்தப் பெற்றான்*
*ஆ இவன் தவத்துக்கன்றி அறத்திற்கும் முதல்வன் அன்றோ.*

இதுவரை காலமும் முனிவர்களாலும் சரி, தேவர்களாலும் சரி, இன்ன தன்மையுடையவன் என்று உணரமுடியாதபடி மேம்பட்டு நிற்கும் ஒப்புவமை கூறமுடியாமல் நிற்கின்ற முருகப் பெருமானை அசுரனாகிய சூரபன்மன் தன்னுடைய இரண்டு ஊனக் கண்களாலும் தரிசித்து விட்டான் அல்லவா! ஆகையினாலே அந்தச் சூரன் என்பவன் செய்ததாகிய அந்தத் தவத்தின் பெறுபேற்றினை இவ்வளவு என்று அறிந்து யாராலும் கூறமுடியுமா? (முடியாது) என்று கச்சியப்பசுவாமிகள் எண்ணுகின்றார்.

யுத்தத்தினைச் செய்வதற்கு வந்த ஒருவனைப்போல விரைந்து வந்து, சூரனுடைய இரண்டு ஊனக்கண்களுக்கும் தென்படும்படியாக மிகவும் இலகுவாகத் தன்னுடைய திருவுருவத்தை முருகப்பெருமான் காட்டி அதன்மூலமாக அவனுக்கு கருணைபுரிந்து நிற்கின்றார் என்று சொன்னால், அந்தப் பெருமானுடைய மாயமான திருவிளையாட்டுக்களை யாரால் அறியமுடியும் என்று கச்சியப்பசுவாமிகள் ஐயம் கொண்டு நிற்கின்றார்.

*பொரு சமர் விளைப்பான் போலப் பொருக்கெனப் போந்து சூரன்*
*இரு விழி தன்னில் காண்பான் எளிது தன் வடிவங்காட்டி*
*அருளது புரிந்தான் என்னில் ஆதியங் குமரன் மாயத்*
*திருவிளையாடல் யார்க்கும் தெரிகில போலுமன்றே.*

முருகப் பெருமானுடைய கருணையை முற்றுமுழுதாகப் பெற்றுக் கொண்டவராகிய கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்களே இந்தவிதமாக முருகப் பெருமானுடைய அழகினையும், கருணையையும் மாத்திரமன்றிச் சூரனுடைய தவவலிமையையும் தவப்பேற்றையும் அளவிட்டுக் கூற இயலாமல் நிற்கின்றார் என்று கூறினால், சாமனியமான எம் போன்றவர்களால் முருகப்பெருமானுடைய அருட்திறத்தையோ, அல்லது அவருடைய பேரழகின் மேன்மையையோ அளவிட்டுக் கூற இயலுமா? அதுமாத்திரமன்றி அந்தச் சூரன் செய்ததாகிய ஒப்பற்ற தவத்தினது தன்மைகளையோ அவனது தவத்தினால் கிடைத்த பலாபலன்களையோ இவ்வளவுதான் என்று அளவிட இயலாது அல்லவா!

மேற்கூறியவைகள் யாவும் இரண்டாம் நாள் யுத்தத்தின்போது

கச்சியப்பசுவாமிகளுடைய மனதில் உதித்த எண்ணங்களாகும். இனி பத்தாம் நாள் யுத்தத்தின்போது கச்சியப்பசுவாமிகள் எங்களுக்கு என்ன அறிவுரையைக் கூறுகின்றார் என்று பார்ப்போம். சூரனுடைய சரீரமானது முருகனது வேற்படையினால் பிளந்து இரு கூறாகிவிட்டன. அப்பொழுதும் கூட சூரன் முன்பு செய்த தவத்தின் பயனாக அந்த உடற் கூறுகள் முறையே சேவலாகவும், மயிலாகவும் உருக்கொண்டு முருகனோடு யுத்தம் செய்ய வருகின்றன. அந்தச் சமயத்தில் முருகப்பெருமான் தனது பன்னிரு விழிகளினால் சேவல்மீதும், மயில்மீதும் கருணையைப் பொழிகின்றார். அப்போது சூரன் பூரணஞானம் அடைந்தவனாகிப் பணிந்து நிற்கின்றான். இந்த இடத்தில் கச்சியப்பசுவாமிகள்,

*தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை*
*ஆயவும் வேண்டும் கொல்லோ அடு சமர் இந்நாட் செய்த*
*மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான்.*

எனக் கூறுகின்றார். அதாவது எப்படியான கொடுஞ் செயல்களைச் செய்தவர்களாய் இருந்தாலும், அவர்கள் முருகப் பெருமானுக்கு முன்னே வந்தால், தங்களுடைய குற்றங்கள் யாவும் நீங்கப்பெற்று பரிசுத்தர்கள் ஆகிவிடுவார்கள் என்பதை நாங்கள் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்று கேட்டால், இதுநாள் வரையிலும் பல கொடுமைகளைப் புரிந்த சூரன் என்பவன், பெருமானுக்குமுன்னே வந்த காரணத்தினால், அளவற்றதாகிய அருட் செல்வத்தைப் பெற்று உய்வழி அடைந்துவிட்டான் என்பதை அறிகின்றோம். இதுவே சுவாமிகளின் உள்ளக்கிடக்கை ஆகும். எனவே கருணையே உருவமாக ஆற்றங்கரையில் கோவில் கொண்டெழுந்தருளி இருக்கின்ற எம்பெருமான் திரு முன்பாகச் செல்வோமேயானால், நாங்களும் சூரபன்மன் பெற்றுக்கொண்டதாகிய எல்லாப் பேறுகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

*புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்*
*நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி*
*என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட*
*பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி.*

- தாரணன்

**தன்னம்பிக்கை**

தன்னம்பிக்கை விலைக்கு வாங்கப்படமுடியாதது. படிப்பதனாலும் கிடைக்காது. அது தகுதியின் அடிப்படையிலேயே கிடைக்கக் கூடியது. அந்தத் தகுதி கிடைக்க வேண்டுமெனில் தெய்வீகமான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். தெய்வீகப் பாதையைப் பின்பற்றுங்கள். இந்தத் தங்கமான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எத்தனை இடர்களும், துயர்களும் ஏற்பட்டாலும் உங்களது இறைநம்பிக்கை உங்களைக் காப்பாற்றும். இறைவன் எப்போதுமே உங்களுடன் இருக்கின்றார். உங்களினுள், உங்களுக்குமேல், உங்களருகில், உங்களைச்சுற்றி இருக்கின்றார்.

# வேலை வணங்குவோர்க்கு வேதனை இல்லை

**- வல்வை ந. அனந்தராஜ் -**

ஈழத்தின் மரபுவழிப்பட்ட முருகவழிபாடு பற்றிய ஒரு சிந்தனையும், அவை தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படும் ***பொழுது.*** இலங்கையின் வடபுலத்தே ஆற்றங்கரையோரமாக நின்று, அருள்பாலித்துக் கொண்டிருக்கும், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தையும், அதன் வழிபாட்டுப் பாரம்பரியத்தையும் எவராலும் மறந்துவிட முடியாது.

செல்வச் சந்நிதி முருகன் ஆலய வழிபாட்டு முறைக்கும், சங்ககால வழிபாட்டு முறைக்கும் இடையிலான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றுள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் "ஆற்றங்கரையான்" எனது வெளியீடான "சந்நிதிச் செல்வம்" மற்றும் "மணிக்கோபுர மலர்" ஆகிய வெளியீடுகள் சந்நிதி பற்றிய முழுமையான ஒரு ஆவணமாக இன்றும் பேசப்படுகின்றன.

"சந்நிதி" ஆலய வழிபாட்டு மரபில் பின்வரும் அம்சங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன:

- ★ சந்நிதி அமைந்துள்ள இயற்கைச் சூழலும், சுற்றிவரவுள்ள அன்னதான மடங்களும்.
- ★ சந்நிதிக்கே உரித்தான பூசைமுறைகளும், நைவேத்தியங்களும்.
- ★ சந்நிதியானின் பக்தர்களின் வழிபாட்டு முறைகளும், சடங்குகளும், நேர்த்திக்கடன்களும்.
- ★ சந்நிதியின் சித்தர் பரம்பரையினரின் அற்புதங்களும், ஞானதிருஷ்டியும்.
- ★ சந்நிதியைத் தனது பிரதான வழிபாட்டுத் தலமாகக் கொள்வோரின் சமூகவியல் பண்புகளும், அவர்களது மனோநிலைகளும்.
- ★ சந்நிதியின் பூசகர்பரம்பரையினரின் பண்புகளும், அவர்களுக்கும் கோயிலுக்கும் உள்ள தொடர்புகளும்

என்ற வகையில் பார்க்கும் பொழுது, "சந்நிதி" என்பது தமிழ் மக்களின், பெரியதொரு மடாலயமாக இயங்கும் ஒரு "ஆன்மீக நிறுவனம்" (Religion Institution) என்ற பதிவுகளைத் தரும்.

ஈழத்து முருக வழிபாட்டின் ஆகமம்சாராத ஒரு ஆலயமாக விளங்குவதற்கு வேல் வழிபாடும், சந்நிதியின் பூசகர்களால் மேற்கொள்ளப்படும் பூசைமுறைகளும், சடங்குகளுமே காரணமாகும். இத்தகையதொரு பூசைமுறையும், பக்தர்களின் ஆடி, ஒடுங்கும் பக்திப் பிரவாகமும் உலகின் எந்தவொரு ஆலயத்திலும் காணமுடியாத அற்புதங்களாகும்.

ஏனைய ஆகமம் சார்ந்த முருக வழிபாடுகளில், முருகனுக்கும் பக்தர்களுக்குமிடையில் நீண்டதொரு இடைவெளி காணப்படுவதும், அவர்களுக்கிடையில் "ஆன்மீக தூதுவர்களாக" பிராமணர்களும், சைவக்

குருக்களும் விளங்குவதால், அங்கேயொரு நிபந்தனைப்படுத்தப்பட்ட பக்தி நிலை மட்டுமே காணப்படுகிறது. ஆனால் செல்வச் சந்நிதி முருகவழிபாட்டு மரபில், பக்தர்களுக்கும், முருகனுக்கும் நெருக்கமான உறவுநிலையும், அவர்களுக்கிடையில் "ஆன்மீக தூதுவர்கள்" என்று எவரும் இல்லாததாலும் அங்கே சுயாதீனமான "பக்திப் பரவசநிலை" காணப்படுகின்றது. இதனால் சாதாரண பாமரர்களின் வேண்டுதல்கள் நேரடியாகவே சந்நிதியானைச் சென்றடைகின்றன.

சந்நிதியின் மூலஸ்தான வழிபாட்டு மூர்த்தியாகவும், எழுந்தருளி மூர்த்தியாகவும் "வேல்" இருப்பது, சந்நிதிக்கே உரித்தான தனித்துவமான ஒரு அம்சமாகும். சந்நிதிச் சூழலில் நிகழ்த்தப்படும் அற்புதங்களுக்கும், பக்தர்களின் பரவச நிலைக்கும் "வேல் வழிபாடே" காரணமாக உள்ளது என்றால் மிகையாகாது.

வேலின் மகிமைபற்றிக் கூறும் பல்வேறு பாடல்களும், உரை நடைகளும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமை வேலின் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதுடன், தமிழர்களின் வாழ்வோடும், சடங்குகளோடும் "வேல்" பெற்றுள்ள இடத்தையும் அறியக்கூடியதாக உள்ளது.

**"தனித்து வழி நடக்குமென திடத்துமொரு வலத்தும்**
**இருபுறத்து மருவடுத்து இரவு பகல் துணையாகும்."**

என்று அருணகிரிநாதர் வேலின் பெருமைபற்றிக் கூறுகையில், தனித்து வழி நடக்கின்ற அடியவர்களுக்கு வலப்புறமும், இடப்புறமும், முன்னும், பின்னும், இரவும், பகலும் துணையாக "வேல்" நின்று விளங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சந்நிதி முருகனை வழிபட்டு அவனுடன் நெருக்கமான உறவு பேணிவரும் பல பக்தர்களின் வாழ்வினை அவற்றின் அனுபவங்களாகக் காணலாம்.

"அச்சமகற்றும் அயில்வேல்" என்று குமரகுருபரரின் பாடல் அடியினூடாக, கலியுகவரதனாகிய முருகப் பெருமானுடைய துணை என்றும் இருப்பதால், அவனுடைய அடியவர்களுக்கு மரணபயம் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

விண்ணோர் சிறைமீட்ட வீரவேலாக இருக்கின்ற "சக்திவேலாயுதம்" நயவஞ்சகர்களையும், கொடும் பகைவர்களையும் துரத்தியடித்து நிம்மதியான வாழ்வினைத்தரும் என்பதைப் புரட்சிக் கவி பாரதியார்,

**"வெற்றி வடிவேலன் அவனுடைய வீரத்தினைப் புகழ்வோம்**
**சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்"**

என்றும் பாடியுள்ளார். இவ்வாறு "வேலை வணங்குவதே வேலை" என்று முருகனையே நம்பி வாழ்கின்ற மக்கள் படும் துயரங்களையெல்லாம் காலமறிந்து சந்நிதியின் "வீரவேல்" காத்தருளும் என்பதைச் சந்நிதியின் பக்தர்குழாம் இன்றும் அனுபவபூர்மாக நம்பிக்கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் சந்நிதியின், ஆற்றங்கரையின் அழகும், ஆலயச் சூழலின் அமைதியும், இரவு பகல் பாராது அன்னம் வழங்கி ஆறுதல் அளிக்கும் சந்நிதியின் மடங்களின் பணிகளும், வெற்றிலைக் கண்களினூடாக, மலர்ச்சோலைகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளி மயிலின்மீது வீற்றிருந்து பவனிவரும் வெள்ளிவேலின் அருட்பார்வையும், மருந்து என்று அமுதாக உண்ணும் பச்சரிப் பொங்கலும், பயற்றம் கறியின் சுவையும், வாய்கட்டி மௌனமாகப் பூசைமுறைகளை மேற்கொள்ளும் பூசகர்களின் கிரியைகளும், பூவெடுத்தும், விளக்கெடுத்தும் தொண்டு செய்யும் அடியவர்களின் பக்தி மயப்பட்ட வழிபாட்டு முறைகளும், சந்நிதிக்கே உரித்தான தனித்துவமான மரபுகளாக விளங்குவதற்கு சங்ககால மரபுடன் ஒன்றிப்போன வேல் வழிபாட்டுப் பாரம்பரியம், தமிழர்களின் வாழ்வில், முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

சந்நிதியின் மூலஸ்தானத்தில் இருக்கும் "வேல்",

**"வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேடிருக்கை வேல் - வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர் மார்பங் குன்றுந்**
**துளைத்த வேல் உண்டே துணை"**

என்பதால் வேலை வணங்குவோர்க்கு "அச்சமில்லை" என்ற உறுதி கொண்ட நெஞ்சினராய், துணைநாடித் துயர்போக்க, சந்நிதி வேலவனின் பாதம் பணிவோம்.

---

## பெருமானாற்றல் சொல்லும், அற்புதங்கள் சொல்லும், சமய வளர்ச்சி கருதிய நூல்களுக்கு தனது நேரடி நெறிப்படுத்தலை வழங்கிநிற்கின்றார் கந்தவேள்!

கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தை எழுதும்போது தினம் தினம் நூறு பாடல்களை எழுதி அந்திப்பொழுதில் கந்தகோட்டத்து வாசற்படியில் வைத்துவிட்டுச் செல்வார். மறுநாட் காலையில் வந்து எடுத்துக்கொள்வார். இவற்றிலுள்ள கருத்துப் பிழைகள், எழுத்துப்பிழைகள் யாவும் கந்தப்பெருமானால் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கும். நக்கீரனால் திருமுருகாற்றுப்படை எழுதியவேளையும் கந்தப்பெருமான் அருகில் நின்று தமிழ்ச்சுவையை முகர்ந்தார்.

இப்புத்திகத்திற்கான வேலையைப் பொறுப்பேற்றுக்கொண்ட பருத்தித்துறை நியூ S.P.M. அச்சகத்தினர், பாடசாலைத் தேர்வு வினாத்தாள்கள் அச்சிட்டுக்கொண்டிருந்த படியால் இப்புத்தக வேலை தாமதமாகிக்கொண்டிருந்தது. கொடியேற்ற தினத்திற்கு சரியாக ஒருவார கால நாட்களே இருக்கையில், அவ் அச்சக உரிமையாளர் தீபன் சொன்னார், "ராத்திரிக் கனாவில் சந்நிதி கோயில்க் காட்சியைக் காட்டி திருவிழாவிற்கு நாடகள் நெருங்கிவிட்டதாக ஞாபகப்படுத்தினார் சந்நிதிப்பெருமான். எனவே இன்றைய தினம் வேறு ஓடர்கள் எடுக்காமல் விட்டுக் கேற்றைப் பூட்டிவிட்டுத்தான் புத்தகவேலையை மெஷினில் ஆரம்பித்திருக்கிறேன்" என்று சொல்லி இப்புத்தகத்தின் மீதுள்ள சந்நிதியானின் அன்புநிலையை உணர்ந்து கொண்டார். இம்முறை காலஅவகாசம் போதாதபடியால் பெருமானின் பரந்துகிடக்கும் அற்புதநிகழ்வுகளைச் சேகரிக்கவில்லை. ஆனாலும் பூநகரியிலிருந்து பெருமானே கிடைக்கச்செய்த அற்புதநிகழ்வை இனிக் காணலாம்.

# தணயன் அழைத்துக்கொண்ட அன்பும், அருளும்! தந்தையின் அற்புதமும்!

புண்ணகை சொரிகின்ற பூநகரி - ஆலங்கேணி என்ற இடத்தில் வசிக்கின்ற சோமசுந்தரம் ஜனார்த்தனன் ஆகிய நான் A/L கலைப்பிரிவில் கல்வி பயில்கின்றேன். ஆலய நிர்வாக உறுப்பினராகவும், ஆலயத் தொண்டுகள், கிரியைத் தொண்டுகள் செய்தும் வருகின்றேன்.

2008 போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதனால் வன்னி இருண்ட பூமியாக மாறியது. பூநகரியில் பிரசித்தி பெற்ற ஆலயங்களான நல்லூர் மேளாய் அம்மன் ஆலயம், பலகத்தறை முருகன் ஆலயம், ஆலங்கேணி கட்டுக்கரை பிள்ளையார் ஆலயம், வாடியடி சோபாலப்பிட்டி பிள்ளையார் ஆலயம், செட்டியகுறிச்சி திகிரிப் பிள்ளையார் ஆலயம் ஆகும். இவ்வாலயங்களில் மக்கள் இடப்பெயர்வுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்பாக பூசகர்களாலும், பக்தர்களாலும் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன. வேறொரு கதியும் தெரியவில்லை. இறைவன் காப்பாற்றுவான் என்று அசையா நம்பிக்கை கொண்டோர் இப்பிரார்த்தனையை ஒழுங்குசெய்தோம். பஜனைக ளாலும், கண்ணீராலும் பாடியழுதோம். எல்லோரையும் காப்பாற்றவேண்டும், ஆலய கட்டடங்கள் செல் படக்கூடாது, சேதமாகக்கூடாது என்பனவே வேண்டுதல் செய்யப்பட்ட பிரார்த்தனைக் கருப்பொருளாகும். அன்றைய இரவும் ஓய்வின்றி அதிர்ந்துகொண்டிருந்த நடுநிசியில் சொற்பநேரம்தான் உறங்கியிருப்பேன். இப்போது நேரில் கண்டுவணங்கப்பெறும் சந்நிதிக் கோயிலை அன்றிரவு கனாவில் காண்கின்றேன். அப்போது இக்கோயிலை எனக்குத் தெரியாது. ஒருகாலமும் நான் வந்ததில்லை. "நீ எப்படித்தான் எங்கு அலைந்து இடம்பெயர்ந்தாலும் அங்கு நான் பக்கத்துணை வருவேனென்றும், இத்துன்பத்திலிருந்து விடுபடும்போது என் பதிக்கு வந்துகொள்வாய். இதிலிருந்து முன்னேற்றத்தை அடைந்து கொள்வாய்" என்று முருகன் விளங்கவைத்தார். எனக்குள் ஒரு ஆரய்ச்சி, "இக்கோயில் எங்கே இருக்கும். எப்பதான் எங்குதான் தரிசனம் பெறுவேன்" என்பதுதான்.

மறுநாள் இடம்பெயர்ந்து உருத்திரபுரத்தில் தங்குகின்றோம். அவ்வேளை உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் யாகபூசைகளும், பிரார்த்தனையும் நடாத்தப்பெற்றது. அவ்வேளை சிவலிங்கத்திற்கு குருக்களால் தேங்காயொன்று உடைக்கப்பட்டது. அத் தேங்காய் இரு ஓடும், இரு உள்ளீடுமாக மாறி மாறி இருந்தன். இரண்டு தேங்காய்ப் பாதிகளை ஒன்றினுள் ஒன்று செருகிவிட்டால் எப்படி இருக்குமோ அதேபோல் இரண்டு பாதிகளும் இருந்தன. இது பக்தர்களுக்கு கொடுத்த ஓர் அதிசய சம்பவம். அவ்வேளை ஆலய குருக்கள் ஐயா கூறியது "ஒருதொகை மக்கள் அழிவடையப் போகிறார்கள். அத்தோடு மிகுதிப்பேர் ஒருபக்கமாகவும் ஒதுங்கிக்கொள்வார்கள் அப்போது யுத்தமும் முடிவடைந்துவிடும்" என்றார் இச்சம்பவத்தை, இத்தேங்காய்ப்பாதியின் காட்சிகளை ஊடகங்கள், இணையத்தளங்கள் ஊடாக உலகமே கண்டறிந்தது. இதனைத்தொடர்ந்து பல இடங்கள் இடம்பெயர்ந்து 2009 பிப்ரவரி மாதம் பொக்கனைக்கு இடம்பெயர்ந்து கொண்டிருந்தவேளை ஒரு கடையில் ஒலித்துக்கொண்டிருந்த "சந்நிதியான் செல்வச் சந்நிதியான்" என்ற பாடலைக்கேட்டு உள்ளமுருகினேன். எமது உயிருக்கோ, அங்கத் துக்கோ ஒரு தீங்குமில்லாமல் இருக்கவேண்டுமென்று வேண்டினேன். தொடர்ந்து இலங்கை இராணுவம் தமது கட்டுப்பாட்டுப்பகுதிக்கு அனுப்பியது. அங்கு நலன்புரி நிலையங்களில் ஆறு மாதங்களாகத் தங்கிப் பின் செல்வச்சந்நிதியான் கோயில் அயலூரான வல்வெட்டியில் எமது உறவினர் வீட்டுக்கு வந்தபின்தான் முதன் முதலாக சந்நிதி கோயிலைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அப்போதுதான் சந்நிதியானின் பெருங்கருணையை உணர்ந்து

கொண்டேன். உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருந்த வேளை தன் கோயிலைக் கனாவில் காட்டி எனைக் காப்பாற்றி தன் ஆலயம் தொழவைப்பேன் என்பதை இன்று நிதர்சனமாகக் கண்டுகொண்டேன். தனது சந்நிதியை வழிபடும் பாக்கியம் எனது உறவுகள் மூலமாக ஏற்பட்டது. இடப்பெயர்வு அவலத்திலே கல்வியில் தடங்கலேற்பட்டபோதும் சந்நிதியானை முதல்முதல் தரிசித்தபின் பரீட்சையிலும் ஓரளவு சித்தியெய்தினேன். தற்போது A/L கலைப்பிரிவில் இணைந்துகொண்டேன். இதுமட்டுமன்றி தற்போது பாடசாலை விடுமுறை என்பதனாலும், அவனருகில் குடியிருந்தும் 2010 மகோற்சவத்தைக் காணுகின்ற பாக்கியம் கிடைத்திருக்கிறது.

இவ்வாறு ஆலயங்களில் வேண்டப்பட்ட பிரார்த்தனையும், வலிந்து ஈர்த்துக் கொண்ட சந்நிதியானின் அருட்திறமும், ஆலய குருவால் உடைக்கப்பட்ட தேங்காய்த் தோற்றம் என்பவற்றின் உண்மையும் தெளிவாக என்மனதில் நாடி துடிப்பதைப் போன்று ஒவ்வொரு நிமிடமும் அருட்சுடராக ஒளிவீசுகின்றது. அதாவது கடவுளும் பக்தர்களைச் சோதித்தே அவர்களின் துன்பங்களைத் தீர்ப்பான் என்று கூறி செல்வச்சந்நிதியான் அருள் இலங்கையில் மட்டுமல்ல, தமிழ்பேசுகின்ற நாடுகளிலும் சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருப்பான் என்று போற்றிப் பணிகின்றேன்.

**P.S. ஜனார்த்தனன்**
கிளிநொச்சி - பூநகரி

---

## *இறைவனுடன் ஒன்றித்து வாழ்தலே* வழிபாடு !

கடவுளை வணங்குவதில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு பழக்கம் உண்டு. சிலர் தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி கடவுளை வணங்குவார்கள். அமாவாசைக்கு அமாவாசை, பறுவத்திற்குப் பறுவம் என்கின்ற ஒழுங்கில் கடவுளை வணங்குவது என்கிற பழக்கமும் சில சமூகத்தவரிடம் உண்டு. எப்படியோ அவசரமான இந்தக் காலத்தில் கடவுளுக்கு நேரத்தை ஒதுக்குவது பெரிய விஷயம் தானே...! இட நெருக்கடியான நகரங்களில் மனிதனுக்கே இடம் இல்லை. ஆனால் கோயிலுக்கு இடம் ஒதுக்கி இருக்கிறோம். விலைகூடிய வீடுகளில் படுக்கையறை, சமயலறை மாதிரி பூசையறை என்று ஒதுக்கி இருக்கிறோம். கடவுளுக்கே இட ஒதுக்கீடு, நேர ஒதுக்கீடு செய்தது மனித ஜாதியின் பெரிய சாதனைதான். இப்படி இடம் ஒதுக்கி, நேரம் ஒதுக்கி இறைவனை நாம் வாழ்க்கையிலிருந்து ஒதுக்கி இருக்கிறோம் என்பது சுவையான விஷயம். கடவுளை வணங்குவது என்பது இப்படிச் சிறியநேர வேலையல்ல. மணி அடிப்பதும், கற்பூரம் காட்டுவதும், பூப் போடுவதும் மட்டுமே பூஜையுமல்ல. நம் முழுநேர வாழ்வுமே இறைவனுக்குரியது.

இடைவிடாது, சீராக இதயம் துடிக்கிறதே அதுகூட ஒருவகை வழிபாடே. எல்லா வேலைகளையும் தன்முனைப்பற்ற நிலையில் கடவுளுக்கு அர்ப்பணிப்பது என்பதுதான் சரியான பூசை. நிற்பது, நடப்பது, கிடப்பது எல்லாமே வழிபாடு என்கிறார் அபிராமிப்பட்டர். சௌந்தர்ய லஹரியிலும் இதே கருத்தை ஆதிசங்கரர் முன்கூட்டியே சொல்லி இருக்கிறார். ஞானிகள் இறைவனுக்கு நேரம் ஒதுக்கி, இடம் ஒதுக்கி வாழ்வில் இருந்து ஒதுக்குவதே இல்லை. எப்போதும் இறையுணர்வுடன்தான் வாழுவார்கள். இது கருதியே மடாதிபதிகளை சந்நிதானம் என்று அழைக்கிறோம். தமது உடலை ஐம்பொறி வழி இன்பம் நுகரும் உடல் என்று கருதாது கடவுளின் சந்நிதி என்று கருதும் காரணத்தால் சந்நிதானம் என்றே துறவிகள் அழைக்கப்பட்டனர்.

வாரத்தில் ஒருநாள், அமாவாசைக்கு அமாவாசை கடவுளை வணங்குவது என்பது கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரித்தான். நம்முள் என்ன மாற்றத்தை விளைத்திருக்கிறது என்று யோசியுங்கள்.

**நன்றி: உதயன்**

## இந்து சமயம் தானாகவே வளர்கின்றது!

# ஐக்கிய இராச்சியத்திலுள்ள இந்து ஆலயங்கள் பற்றிய சிறு கண்ணோட்டம்

*- லண்டனிலிருந்து நடேசபிள்ளை சுதாகரன் -*

கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய ஆகமம் சாராத பூசை வழிபாட்டுமுறையில், லண்டனில் வேல்ஸ் என்ற இடத்தில் ஸ்கந்தவேல் என்ற ஆலயமும் பெருவளர்ச்சி கண்டுவருகின்றது.

ஐக்கிய இராச்சியம் (U.K) எனக் குறிப்பிடப்படும் நாடுகளில் ஒன்றான வேல்ஸ் என்ற இடம். இதில் மலையும் மலைசார்ந்த இடத்தில் முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு முதலாவதாக பிள்ளையார், முருகன் ஆலயம் உள்ளது. இம்முருகன் ஆலயத்திலிருந்து வலது பக்கமாக சிறிது தூரம்சென்று சற்று உயரத்தில் மேல்நோக்கி நேராக அம்பிகை, விஷ்ணு, சிவன் ஆலயங்கள் நேர்த்தொடரில் தனித்தனியே அமைந்திருக்கின்றன. சிவனுக்கு அபிஷேக நீர் வார்க்கும்போது, இந்நீர் நேர்கீழே இருக்கும் விஷ்ணுவிற்கும் அபிஷேகமாகும். திரும்பவும் இந்நீர் நேர்கீழே இருக்கும் மாயவனின் தங்கையான அம்பிகைக்கும் அபிஷேகமாகும். முருகன் ஆலயத்திலிருந்து சிறிது தூரம் இடதுபக்கமாக மலையின் உயரப்பகுதியில் காளிகாதேவி ஆலயம் தனியாக அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு மலையேறிச் செல்ல அரைமணித்தியாலம் பிடிக்கும். வயதானோர், நடக்க முடியாதோர் வாகனத்தில் செல்லக்கூடிய வசதியுமுண்டு. சிவன், விஷ்ணு, அம்பிகை, காளி முதலான முகூர்த்தங்கள், பரிவார முகூர்த்தங்கள் என்று சொல்லமுடியாத அளவிற்கு தனித்தனியே பெரும் கருவறைகளில், பெரும் விக்கிரக தோற்றத்துடன் அருள்பாலிக்கின்றனர்.

Skandavel Temple (ஸ்கந்தவேல் ஆலயம்) என்ற பெயரால்த்தான் இங்கு பொதுவாக எல்லா ஆலயத்தையும் சேர்த்துச் சொல்லப்படும். இவ்வாலயத்தைத் தரிசிக்கவரும் தமிழ்மக்களுக்கு நிகராக வெள்ளையின மக்களும் வந்து வழிபாடியற்றுகின்றனர்.

இங்குள்ள சகல ஆலயங்களிலும் உட்சென்று வழிபடுவதாயின், முதல் மூன்று நாட்களும் மச்சம், மாமிசம் சாப்பிடாமல் இருந்துவிட்டுத் தான் வந்து வழிபடுவார்கள். இப்படியில்லாது அன்றையதினம் மட்டும் மச்சம் மாமிசம் சாப்பிடாது வருவோர் முருகன் ஆலய முகப்புமண்டபத்தில் மட்டும் நின்று வழிபடுவார்கள். இம்முகப்பு மண்டபத்தின் குறுக்காக ஒரு நூல் கட்டப்பட்டிருக்கும். இந்த நூலிற்கு வெளியே நின்றுதான் வழிபடுவார்கள். இப்படியாக வருவோர், இங்கே தனியாக உயரத்திலே இருக்கும் காளி ஆலயப்பக்கம் செல்லவேமாட்டார்கள். இவ்விதிமுறையை மீறுவோர் ஏதாவதொரு குறை, குற்றம் தண்டனைகளுக்கு ஆளாகுகிறார்கள். தாம் புரிந்த தவறைத் தாமாகவே வெளிப்படுத்துவார்கள். அண்மையில் எனது தமிழ்நண்பரொருவர், “இன்று நான் வியர் குடித்துவிட்டுத்தான் கோயிலுக்கு

வருவேன். இது உண்மைதானா? என்ன நடக்குதென்று பார்ப்பம்" என்று சவால்விட்டு வியர் குடிக்க ஆரம்பித்தார். நான் தடுத்துப் பார்த்தும் கேட்க வில்லை. நண்பர் முழுவதுமாக வியர் குடித்து முடிப்பதற்கு முன்பாகவே காளி தன் திருவிளையாடலைக் காட்டிவிட்டா. பெரும் நோய்த்தாக்கத்துககு ஆளானார். உடனடியாகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலையில் 14 நாட்கள் தங்கியிருந்தார்.

எம்மதத்தைச் சேர்ந்த எவராயினும், தமக்கு என்ன பலன் கிடைக்க வேண்டுமென்ற வேண்டுதலோடு வந்து வணங்குகிறார்களோ, அவ்வேண்டு தல்கள் நிறைவேறுவதாகப் பரவலாகச் சொல்கிறார்கள். தூர இருந்துவரும் பக்தர்களும் இங்கே தங்கியிருந்து வழிபடக்கூடிய சகல வசதிகளும் இருக்கின்றன.

இவ்வாலயத்தின் நிர்வாகம், அதன் பராமரிப்பு அவ்விடத்தில் வாழும் வெள்ளை இன மக்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. இங்கு மந்திரம் சொல்வதில்லை. பூசையாற்றும் வெள்ளையின பூசகர் தீபம் காட்டும்போது இறைபாடல்களைத் தமிழில் பாடிக்கொண்டே தீபம்காட்டுவார். இந்நேரம் எல்லோரும் சேர்ந்து பாடுவார்கள். விஷேசதினப் பூசைகளுக்குத் தேவையான - அரிதாகக் கிடைக்கக்கூடிய பண்டங்கள், பழவகைகளை பூஷகரே எவ்வளவு தூரமென்றாலும் சென்று தேடிக்கொண்டு வருவார். இவ்வாலயத்தின் இணையத்தள முக ்ரி:- w.w.w. skandavel. org

எங்கள் இந்துசமயம் திறந்துவிட்ட கட்டடம்போல் யாரும் போகலாம். யாரும் வரலாம். எங்கள் சமயத்தைப்பற்றிச் சொல்லக்கூடிய தனிச்சிறப்பு என்னவெனில், குருமகாசந்நிதானங்களோ, குருமார்களோ, இந்துமன்றத் தினரோ, பக்தர்களோ, எங்கள் சமயம் சார்ந்த யாராக இருந்தாலும் வேறு மதத்தினர் எவரையும் எங்கள் சமயத்திற்கு வாருங்கள் - மதம்மாறுங்கள் என்று எக்காலத்திலும் கேட்டதில்லை என்று மார்தட்டிச் சொல்லலாம். இறையருள், இறைசக்தி வெளிப்படையாக மிளிர்ந்துகொண்டிருக்கும் - அன்பினை எடுத்தியம்பும் அருளூற்றான சமயமாகையால், எங்கள் மதத்தில் பிறந்த சில அன்பர்கள் குத்துக்கரணம் அடித்தபோதும், இதைவிடப் பெருந்தொகையான பல மதத்து மக்களும் தாமாகவே வந்துகொண்டி ருக்கிறார்கள்.

இதற்குக் குறைந்தபட்ச சான்றாக - மேற்சொன்ன வேல்ஸ் நாட்டுக் கோயிலும் ஒரு உதாரணம். அடுத்ததாக மேலைத்தேய நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள், பிரபுக்கள் முதலான பெருந்தொகையானோர் இந்தியாவின் புட்டர்பத்தியில் தம் சொத்துக்கள் எல்லாவற்றையுமே துறந்துவிட்டு பகவான் பாதத்தில் உபவாசம் செய்கிறார்கள். ஓடியோடி சுழன்று சுழன்று மலைபோலச் சொத்துகளைக் குவித்தவர்கள் புட்டர்பத்தியில் நின்று உரக்கச் சொல்லு கிறார்கள் - பகவான் பாதத்தில் வாழும் நிறைவான ஆத்மீக நின்மதி சொத்துக்களைக் குவித்தபோது ஏற்படவில்லையென்கிறார்கள். அமெரிக்கா முதலான நாடுகளில் ஹரே கிருஷ்ணா அமைப்பில் பல இன மக்களும் இறைமணம் கமழும் ஆத்மீகவாதிகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். சிறீலங்காவின் கதிர்காமத்தை எடுத்துக்கொண்டால் சிங்களம் பேசும்

கப்புறாளைமார்களே பூசையாற்றுகின்றார்கள. கதிர்காமம், மயூராபதி, கொழும்பில் அதிகமான இந்து ஆலயங்களிளெல்லாம் பல இன மத மககளெல்லோரும் தாமாக அருள்கொண்டு வந்து இந்து வணக்கம் செய்கிறார்கள். செல்வச் சந்நிதியிலும் ஜேர்மன்சாமியார் வாசம்செய்து சமாதியடைந்தார். மறைந்த கவியரசர் கண்ணதாசன் குறிப்பிட்டிருந்தார். தான் சிறிது காலம் மதம்மாறியிருந்த படியால்த்தான் தனக்கு இந்துமதத்தின் அருமை, பெருமையெல்லாம் புரிந்ததென்று. இதன்பிறகே பல பாகங்களாக வெளியிடப்பட்ட "அர்த்தமுள்ள இந்துமதம்", பட்டிணத்தார் காவியம் முதலான இந்துமதம் பற்றிய புத்தகங்களை வெளியிட்டுச் சாதனை படைக்க முடிந்ததென்று.

இங்கே லண்டனில் 28 இந்து ஆலயங்கள் அருட்சுடர் வீசிப் பெரும் மக்கள் கூட்டம் ஆட்கொள்ளப்படுகிறார்கள். லண்டன் மேற்கு (ஈலிங்) பகுதியில் கனகதுர்க்கையம்மன் ஆலயம் பிரமாண்டமாகக் காட்சியளிக்கிறது, பெருந்தொகையான பக்தர்கூட்டம் வேண்டுதல் செய்கிறார்கள். இவ்வாலயம் அமைந்திருக்கும் இடத்தில், முன்னைய காலத்தில் ஒரு தேவாலயம் இருந்தது. இதுமட்டுமன்றி, இங்கிலாந்தைச் சேர்ந்த வெள்ளையின மக்களில் ஒருபகுதியினர் இந்து மதத்துக்கு அவர்கள் சேவை, தொண்டு புரிந்து அர்ப்பணமாக இருக்கின்றனர்.

லண்டன் கிழக்கு மனோபார்க் என்ற இடத்தில் லண்டன் ஸ்ரீமுருகன் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோவில் ராஜகோபுரத்துடன் காட்சியளிக்கின்றது. இக்கோயில் முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.

இந்துமக்களின் தமிழ்க்கடவுளான முருகப்பெருமான் இன்று எல்லா மொழியினருக்கும் அருள்புரியும் அன்புக்கடவுளாக எல்லோர் மனதிலும் திகழ்கின்றார். ஆகையால் நாங்கள் எல்லோரும் முருகனை நினைந்து வணங்கி அவனருள் பெறுவோமாக.

சென்ற ஆண்டு வடமராட்சி, தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் முருகனடியவர் சிவகுமார் அவர்களால் வெளியிடப்பட்ட அற்புதங்களும், அனுக்கிரகங்களும் என்ற சிறிய புத்தகம் முருகனருளால் கிடைக்கப் பெற்றேன். குறைந்த பேப்பர்களுடன் வெளியிடப்பட்ட சிறிய புத்தகமானாலும் சந்நிதி முருகனின் அண்மைக்கால அற்புதங்களில் சிலவற்றையேனும் ஆதார பூர்வமாகக் கனதியாக வெளியிடப்பட்டிருந்தன. இறைவனின் அற்புதங்களை வெளியில் சொன்னால் இறை "பவர்" குறைந்துவிடுமோ என நினைக்கின்ற ஆட்கள் மத்தியில், சமயவளர்ச்சி கருதியும் முருகன் புகழ் எங்கும் பரவ வேண்டுமென்ற பெருவிருப்பிலும் பத்தாயிரம் புத்தகங்களை இலவசமாக வெளியிட்டிருக்கிறார் என்ற தகவலையும் அறிந்துகொண்டேன். இப்புத்தகம் மூலமாக ஏதேனும் எழுதவேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. அந்த முருகப் பெருமானே இதற்குக் களம் அமைத்துத்தந்தார்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**நடேசபிள்ளை - சுதாகரன்**
**64, High Street North**
**Eastham, London,**
**E 6 2 HJ**
**U. K.**

கந்தா! முருகா! வழிகாட்டு - உன்
கடைக்கண்ணாலே பழி ஓட்டு
செந்தேன் போலே மொழியூட்டு - இந்த
சேய்மொழி கேட்டுன் அருள் கூட்டு (கந்தா...)

வேலைப் பிடித்திடர் கொய்பவனே!
விருப்பு வெறுப்பில்லாதருள் செய்பவனே!
காலைப் பிடித்தழத் தேடுகிறேன் - அதைக்
காணாமல் நெஞ்சம் வாடுகிறேன். (கந்தா...)

குண்றுகள் தோறும் கோயில் கொண்டாய்
அன்பு கொண்டந்தச் சூரனின் மாயை வென்றாய்
இன்று என் நெஞ்சினில் கோயில் கொண்டாய் - நீ
இப்புவி வாழ்வெனும் மாயை வென்றாய். (கந்தா...)

அன்னையும் தந்தையும் நீதானே! - என்னை
ஆதரிப்பாயென வந்தேனே!
பொன்னையும் பொருளையும் கேட்கவில்லை
நீ பூவிழி திறந்தேன் பார்க்கவில்லை. (கந்தா...)

எல்லாம் உனது நாடகமோ!
யார் அறிவார் அதன் காரணமோ!
வல்லான் உனக்கோர் இணையில்லை - என்
வாழ்வினில் உனைப்போல் துணையுமில்லை. (கந்தா...)

**சந்நிதியின் ஆற்றினுடைய மகிமை:-**

தடிமனென்பது எல்லோருக்கும் வந்து மாறுவதுதான். ஒரு பெண்பிள்ளைக்குத் தடிமன் வந்து நெடுநாட்களாக மாறாமல் துன்புறுத்திக் கொண்டிருந்தது. வதிரி, இரும்புமதவடியைச் சேர்ந்த இப்பிள்ளையின் (மணி குடும்பம்) தெஹிவளையில் நெடுங்காலமாக வசித்து வருகிறார்கள். "பல இடத்திலை வைத்தியம் செய்தும் மாறாமல் இருக்கிறது" என்றார்கள். இரண்டு நாட்கள் சந்நிதியான் ஆற்றினிலே நீராடிவிட்டு முருகனை வணங்கிப்பாருங்கள். இப்படிச் செய்தபின் சுகம் கிடைத்ததா எனத் தெரியப்படுத்தவும் என்றேன். இங்கேவந்து நீராடி, முருகனைத் தரிசித்துவிட்டு கொழும்புக்குச் சென்றபின் போனில் தெரிவித்தார்கள். "அதிசயமாய்த்தான் இருக்குது! உண்மையிலே பிள்ளைக்கு நல்ல சுகம் கிடைத்துவிட்டது" என்றார்கள். இதேபோல் சரும வியாதிகள், மாறாத தலையிடியுடையோர், கால் வருத்தமுடையோர் வருத்தம் சுகமாகும் வரைக்கும் முருகனை நம்பிக்கையுடன் வேண்டுதல்செய்து கிழமைக்கொரு தடவைப்படியென்றாலும் நீராடிப்பார்த்தால் அப்பனின், ஆற்றின் மகிமைபுரியும். இப்படிப் பலன் பெற்றவர்கள் பெருமளவானோர்.

# சந்நிதிப்பெருமான் திருவருள் முன்னின்று வழிநடாத்த, தூயசெல்வத்தை மனமுவந்தளித்தோர் விபரம்

| | |
|---|---|
| திரு. N. கவிதாசன் கனடா (பொலிகண்டி) | 10100.00 |
| திரு. சி. ரூபானந், லண்டன் | 10000.00 |
| திரு. திருமதி தவராசா - தங்கமலர் குடும்பம், பற்பைவளவு, வதிரி | 7000.00 |
| பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை, (ஊறணி) | 6600.00 |
| பிரதேச செயலகம், பருத்தித்துறை | 6000.00 |
| திருமதி தி. யோகராணி, வதிரி | 5000.00 |
| திருமதி சி. கமலாதேவி நாரஹேஹன்பிட்டி, கொழும்பு | 5000.00 |
| தி. சுபன், கமலினி, பருத்தித்துறை | 5000.00 |
| திருமதி மணி, கல்வத்தை, வதிரி | 5000.00 |
| திரு. கு. அமிர்தலிங்கம், குச்சம், வல்வெட்டித்துறை. | 5000.00 |
| திரு. கந்தசாமி - தவரூபன், கனடா | 5000.00 |
| வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம், கரவெட்டி | 4900.00 |
| வடமராட்சி சிற்றூர்திச் சங்கம், பருத்தித்துறை. | 3000.00 |
| இலங்கை வங்கி, விரிவாக்கல் கிளை, வல்வெட்டித்துறை. | 2800.00 |


| | | | |
|---|---|---|---|
| இ. பரமேஸ்வரி, நவிண்டில் | 3000.00 | நகரசபை, வல்வெட்டித்துறை | 1000.00 |
| புஸ்பராசா வாகீசன், வதிரி | 3000.00 | S. சின்னராசா வல்வெட்டி | 1000.00 |
| சி. தீபன் பருத்தித்துறை | 2000.00 | ச. சசிகரன் லண்டன் (அல்வாய்) | 1000.00 |
| வல்வெட்டி இ.த.க. பாடசாலை | 2000.00 | K.S. கண்ணன், நல்லூர் | 1000.00 |
| ராணி, பற்பைவளவு, வதிரி | 2000.00 | சி. தனபாலசிங்கம் புலோலி | 1000.00 |
| பாலாஜி-பாரதி, தமிழ்நாடு | 2000.00 | அருட்குமரன், பிரார்த்தனா V.V.T | 1000.00 |
| சோதி ஸ்ருடியோ, மல்லாகம் | 2000.00 | சி. கஜன், இலக்கணாவத்தை | 1500.00 |
| மணியண்ணை (கதிர்காமத்தம்பி) | 1500.00 | துரை சவுண்ட், கொம்மந்தறை | 1000.00 |
| சி. திலீபகுமார், வதிரி | 1500.00 | பண்டா கடை, கம்பர்மலை | 1000.00 |
| ச. கபிஷான், வதிரி | 1000.00 | பா. மீனாட்சிசுந்தரம், V.V.T. | 500.00 |
| நல்லம்மா, பெரியதோட்டம் வதிரி | 1000.00 | மொத்தம் | 111400.00 |

## நவாலியிருந்து 58 நாட்கள் கால்நடையாக கதிர்காமம் சென்ற 70 வயது மூதாட்டி!

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த ஆண்டி சின்னம்மா என்ற 70 வயது மூதாட்டி கதிர்காமக் கந்தனைத் தரிசித்து வந்துள்ளார். ஆடிவேல் விழாக் காட்சிகளையும் கண்டு களித்து வந்துள்ளார். இவர் இங்கிருந்து கடந்த மே மாத நடுப்பகுதியில் கால்நடையாகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கும் போது வேறுசிலரும் இணைந்து கொண்டனர்.

இவர்கள் செல்லும்போது இரவு வந்ததும் வழியில் தென்படும் ஆலயங்களில் படுத்துறங்கிவிட்டு மீண்டும் மறுநாள் நடக்கத் தொடங்கி விடுவார்களாம். வெயிலின் களைப்பால் காட்டுப் பாதைகளில் மரநிழல்களின் கீழ் தங்கியிருக்கும்போது அவ்விடத்தால் செல்லும் மக்கள், படையினர் குளிர்பானங்களை வாங்கிக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள் என்று அவர் தெரிவித்தார். இவ்வாறு 70 வயதில் 58 நாட்கள் நடந்து கந்தனைத் தரிசித்து விட்டு வந்த மூதாட்டியின் துணிச்சலையும், முருகன் மீதுள்ள பக்தியையும் மக்கள் பலரும் பாராட்டியுள்ளனர்.

நன்றி : உதயன் (10-08-2010)



பந்தவினை எமை வந்து அணுகாமலே
பாசத்தொடர் எமைவிட்டகன்று போக
வந்தவினை தனை அறுக்கும்வடி வேலனே
வரமருளும் வரதனுக்கு வடி வேலனே
சந்ததமும் உனைத் துதிக்க மனமிரங்கியே
சார் துன்பம் அனைத்தையுமே அழித்து என்றும்
எந்நிதியும் அடியவர்க்கு வழங்கி நிற்கும்
சந்நிதியில் அமர்ந்த கந்தப் பெருமாளே.

ஆறுபடை வீடு உகந்த முருகேசனே
அடியவர்கள் படுதுயரம் தீர்த்தாளுவாய்
கூறு புகழ் சந்நிதியின் தனித்தெய்வமே
கூத்தப் பெருமான் மகிழும் குமரேசனே
சீறு கடற் திரைகள் சங்காஸ் அர்ச்சிக்கவே
சித்திர மயிலிவரும் சண்முகவேலா
மாறுபடு சூரரை வதைத்த கந்தா
பூவரச நிழல் அமர்ந்த பெருமாளே.

திருமதி: சந்தனா நல்லலிங்க ஐயர்
செல்வசந்நிதி

வெளியீடு: ஸ்ரீவாணி வெளியீட்டகம்:0778285599